## (ஈ) பணம், வங்கித்தொழில் ஆகியவற்றின் அபிவிருத்திகள்

1972, செப்தெம்பர் 1ஆந் திகதி தொடங்கி 1972, திசெம்பர் 17ஆந் திகதி முடிவுற்ற வர்த்தக வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தத்தினல் பணம், வங்கித்தொழில் ஆகியவற்றின் அபிவிருத்திகள் பற்றி ஆண்டு முழுவதிற்கு மாக மீளாய்வுசெய்வது இயலாததாகும். வேலைநிறுத்தம் நடைபெற்ற முழுக் காலப்பகுதிக்கான தரவுகளை வங்கிகள் சமர்ப்பிக்கமுடியவில்லை; ஆயின் இத் தரவுகள் கிடைக்கக்கூடியனவாயிருப்பினும், இவ்வேலைநிறுத்தம் வங்கித் தொழிற்பாடுகளைப் பெருமளவிற்குத் தகர்க்கும் தன்மைவாய்ந்ததாயமைந்த மையால் இத்தகைய பகுப்பாய்விற்கு இவற்றைப் பயன்படுத்தமுடியாது ஆகவே, பின்வரும் மீளாய்வு முக்கியமாக 1972 சனவரி – ஒகத்து காலப் பகுதியில் நடைபெற்ற அபிவிருத்திகளையே உள்ளடக்குகின்றது.

### 1. (அ) பண நிரம்பல் – முக்கிய போக்குகள்

1972இன் முதல் எட்டு மாதங்களில், பண நிரம்பலின் வளர்ச்சியும் இதைப் பாதிக்கும் காரணிகளும் சென்ற ஆண்டின் தொடர்பான காலப் பகுதியிலிருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகளைக் காட்டுகின்றன. பண நிரம்பல் 1971இன் தொடர்பான காலப்பகுதியில் ரூ 1,760 இலட்சம் அல் லது 8.9 சதவீதத்தால் உயர்வுற்றமையை ஒப்புநோக்கும்போது நாணய விரிவு ரூ. 60 இலட்சத்தில் அல்லது 0.3 சதவீதத்தில் மிகச் சிறியளவாக விருந்தது. ஆயினும், பண நிரம்பலின் மாதாந்தச் சராசரி அளவு சென்ற ஆண்டின் தொடர்பான காலப்பகுதியிலும் பார்க்க 2.4 சதவீதம் அதிக மாகவிருந்தது.

மீளப்பார்வையிடும் காலப்பகுதியில், பண நிரம்பலின் அளவு மாதத் திற்கு மாதம் குறிப்பிடத்தக்களவு ஏற்றவிறக்க நிலையையடையத் தொடங் கியது; இதற்கு உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெற் கொள்வனவிற் காக வழங்கப்படும் வங்கிக் கொடுகடன் பண நிரம்பலின் முக்கிய விரிவுத் தாக்கமாக அமைந்தமையைக் காரணமாகக் கூறலாம். பண நிரம்பல் சனவரி யிலும் பெப்புருவரியிலும் முறையே ரூ. 474 இலட்சத்தாலும், ரூ. 152 இலட்சத்தாலும் வீழ்ச்சியுற்றது; ஆனல் பெரும்போக நெற் கொள்வனவின் ஆரம்பத்துடன் மாச்சிலும் ஏப்பிறலிலும் இது, முறையே ரூ. 179 இலட் சத்தாலும், ரூ. 479 இலட்சத்தாலும் உயர்வுற்றது. நெற் கொள்வனவிற் காக வழங்கப்படும் பொருள் வரவு முற்பணங்கள் 1971 திசெம்பர் இறுதி யில் ரூ. 849 இலட்சமாக அமைந்து 1972 சனவரி இறுதியில் ரூ 645 இலட் சமாகவும், பெப்புருவரி இறுதியில் ரூ. 444 இலட்சமாகவும் குறைவுற்று மாச்சு, ஏப்பிறல் இறுதியில் முறையே ரூ. 739 இலட்சமாகவும் ரூ. 1,282 இலட்சமாகவும் உயர்வுற்றன. இம்முற்பணங்கள் மேலும் தொடர்ந்து உயர் வுற்றபோதும், அரசாங்கத் துறையினதும், வெளிநாட்டுத் துறையினதும் தொழிற்பாடுகளிலிருந்து ஏற்படும் சுருக்கத்தாக்கம் மே மாதத்தில் பண நிரம்பலின் அளவை ரூ. 79 இலட்சத்தால் குறைக்குமளவு தாக்கத்தை ஏற் படுத்தியது. பண நிரம்பல் மீண்டும் யூன் மாதத்தில் முக்கியமாக நெற் கொள்

## அட்டவணை II (ஈ) 1

### பணநிரம்பல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | 1968 | 1968 | 1970 | 1971 | 1972 | சதவீத மாற்றம் 1968–69 | சத வீத மாற்றம் 1969–70 | சதவீத மாற்றம் 1970–71 | சதவீத மாற்றம் 1971–72 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனவரி ... | 1,792 | 1,883 | 1,872 | 1,943 | 2,102 | + 5.1 | - 0.6 | + 3.8 | + 8.2 |
| பெப்புருவரி .. | 1,793 | 1,880 | 1,884 | 1,973 | 2,086 | + 4.8 | + 0.2 | + 4.7 | + 5.7 |
| மாச்சு ... | 1,831 | 1,911 | 1,932 | 2,050 | 2,104 | + 4.4 | + 1.1 | + 6.1 | + 2.6 |
| எப்பிறல் ... | 1,857 | 1,917 | 1,942 | 2,101 | 2,152 | + 3.2 | + 1.3 | + 8.2 | + 2.4 |
| மே ... | 1,869 | 1,900 | 1,974 | 2,120 | 2,144 | + 1.7 | + 3.9 | + 7.4 | + 1.1 |
| யூன் ... | 1,857 | 1,918 | 1,990 | 2,150 | 2,161 | + 3.3 | + 3.7 | + 8.0 | + 0.5 |
| யூலை ... | 1,831 | 1,872 | 1,983 | 2,134 | 2,110 | + 2.2 | + 5.9 | + 7.6 | — 1.1 |
| ஓகத்து ... | 1,839 | 1,880 | 2,017 | 2,143 | 2,155 | + 2.2 | + 7.3 | + 6.2 | + 0.6 |
| செத்தெம்பர் ... | 1,850 | 1,885 | 2,066 | 2,149 | | + 1.9 | + 9.6 | + 4.0 | |
| ஒற்ரோபர் ... | 1,889 | 1,891 | 2,068 | 2,175 | | + 0.1 | + 9.4 | + 5.2 | |
| நவெம்பர் .. | 1,896 | 1,902 | 1,927 | 2,140 | | + 0.3 | + 1.3 | + 11.0 | |
| திசெம்பர் ... | 1,913 | 1,883 | 1,967 | 2,150 | | - 1.6 | + 4.5 | + 9.3 | |
| மாதாந்தச் சராசரி ... | 1,851 | 1,893 | 1,969 | 2,102 | | + 2.3 | + 4.0 | + 6.7 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வனவிற்கான முற்பணங்களின் அதிகரிப்பினால் ரூ. 163 இலட்சத்தால் உயர்வுற்றது; ஆனால், யூலையில் ரூ. 503 இலட்சத்தால் கூர்மையாக வீழ்ச்சியுற்றது. யூலையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு நெற் கொள்வனவு முற்பணங்களின் வீழ்ச்சியும், அரசாங்கத் தொழிற்பாடுகளிலிருந்து ஏற்பட்ட சுருக்கமுமே காரணங்களாகும். ஆயினும், ஓகத்தில் நெற் கொள்வனவிற்கான முற்பணங்கள் ரூ. 465 இலட்சத்தால் கணிசமானளவு குறைவுற்றபோதும், பண நிரம்பல் ஏனைய துறைகளின் விரிவுத் தாக்கங்களினால் ரூ. 447 இலட்சத்தால் உயர்வுற்றது. மொத்தமாக, இக்காலப்பகுதியை (சனவரி—ஓகத்து) நோக்கும் போது நெற் கொள்வனவுகளுக்கான வங்கிக் கொடுகடனில் ரூ. 742 இலட்சம் கொண்ட கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டிராதுவிடின், பண நிரம்பல் குறிப்பிடத்தக்களவு குறைவுற்றிருக்கும்போல் தோன்றுகின்றது. 1971இன் தொடர்பான காலப்பகுதியில் இம்முற்பணங்கள் ரூ. 564 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன; ஆனால் வங்கித் துறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பினால், பண நிரம்பல் ஏறக்குறைய தளராது உயர்வுற்றது.

ஆகவே, 1971 காலப்பகுதியில் கணிசமானளவு நாணய விரிவு ஏறக்குறைய முற்றிலும் வெளிநாட்டுத் துறைத் தாக்கத்தினால் ஏற்பட்டிருக்கையில், 1972 காலப்பகுதியில் முக்கியமாக நெற் கொள்வனவுகளுக்காக கூட்டுறவுகளுக்கு வழங்கப்படும் வங்கிக் கொடுகடனே முக்கிய விரிவுத் தாக்கமாக அமைந்தது. ஏனைய தனியார் துறையினதும், வெளிநாட்டுத் துறையினதும் தொழிற்பாடுகளும் விரிவுத்தன்மைவாய்ந்தனவாக அமைந்தன. மறுபுறம் அரசாங்கத்துறைத் தொழிற்பாடுகள் இவ்விரிவுத் தாக்கங்களைக் கணிசமானளவிற்கு ஈடுசெய்யத்தக்கதாய் அமைந்தன.

### 1. (ஆ) பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகள்

பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகளின் பகுப்பாய்வு அட்டவணை II. (ஈ) 2 இல் தரப்பட்டுள்ளது.

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோன்று பண நிரம்பலின் மீதான முக்கிய விரிவுத்தாக்கம் தனியார்துறைத் தொழிற்பாடுகளிலிருந்து தோன்றியது. இத்துறைக்கான (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுகளும் உட்பட) வங்கிக் கொடுகடன் ரூ. 1,305 இலட்சத்தால் உயர்வுற்றது. இத்தொகை 1971இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ. 199 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பீடற்பாலது. கூட்டுறவுகளுக்கான கொடுகடன் சென்ற ஆண்டு காலப்பகுதியில் ரூ. 192 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றதற்கு எதிராக இக்காலப்பகுதிக் கொடுகடனில் கூட்டுறவு நிறுவனங்கள் ரூ. 832 இலட்சம் கொண்ட பெருந்தொகையைப் பயன்படுத்தின. கூட்டுறவுகளுக்கான கொடுகடன் அதிகரிப்பில், ரூ. 742 இலட்சம் கொண்ட பெரும் பகுதி உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் நெல் விற்பனவு தொடர்பாக பொருள் வரவுகளை வைத்துப் பெற்ற முற்பணங்களைக் குறிக்கின்றது. பருவகால உச்சநிலைக்குப்பின் (ஏப்பிறல்-யூன்) நெற் கொள்வனவுகளுக்கான வங்கிக் கொடுகடனில் ஏற்பட்ட கூடிய

## அட்டவணை II (ஈ) 2

## பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களும் அடிப்படைக் காரணிகளும்

(ஆண்டிறுதி எண்தொகைகளை அடிப்படையாகக் கொண்டவை)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் | 1967 இறுதி/ 68 இறுதி | | 1968 இறுதி/ 69 இறுதி | | 1969 இறுதி/ 70 இறுதி | | 1970 இறுதி/ 71 இறுதி | | 1970 இறுதி/ 1971 ஒகத்து இறுதி | | 1971 இறுதி/ 1972 ஒகத்து இறுதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் |
| 1. வங்கியின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் (தேறிய) ... | — | 115.7 | — | 299.6 | — | 1.5 | 200.5 | — | 290.0 | — | 43.4 | — |
| 2. தனியார் துறை* ... ... ... ... ... | 264.1 | 165.4 | 226.0 | 193.8 | 219.4 | 238.3 | 152.6 | 228.8 | 39.1 | 147.4 | 144.7 | 33.7 |
| (அ) கூட்டுறவு நிறுவனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ... | 18.5 | — | 19.9 | — | 146.3 | — | — | 3.4 | — | 19.2 | 83.2 | — |
| (ஆ) ஏனைய தனியார் துறைப் பகுதிகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் | 155.0 | — | 136.2 | — | — | 42.0 | 84.1 | — | 7.8 | — | 41.3 | — |
| (இ) கூட்டுறவு நிறுவனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | — | 1.5 | — | 2.9 | — | 7.6 | — | 11.9 | — | 6.9 | — | 1.1 |
| (ஈ) ஏனைய தனியார் துறைப் பகுதிகளின் தவணை சேமிப்பு வைப்புக்கள் | — | 100.8 | — | 144.4 | — | 188.7 | — | 132.0 | — | 55.1 | — | 30.1 |
| (உ) வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் (தேறிய) ... ... ... ... ... | — | 40.9 | — | 35.7 | 12.4 | — | — | 81.5 | — | 58.3 | 14.2 | — |
| (ஊ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் | 90.6 | — | 69.9 | — | 43.2 | — | 62.3 | — | 31.3 | — | 6.0 | — |
| (எ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | — | 22.2 | — | 10.8 | 17.5 | — | 6.2 | — | — | 7.9 | — | 2.5 |
| 3. அரசாங்கத் துறை ... ... ... ... ... | 306.9 | 184.5 | 243.1 | 7.6 | 349.8 | 244.6 | 181.2 | 127.7 | 114.3 | 119.7 | 68.2 | 215.9 |
| (அ) வர்த்தக வங்கிகள் வசமுள்ள இறைசேரி உண்டியல்கள், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள், அரசாங்க இறக்குமதி உண்டியல்கள் ஆகிய உடைமைகள் ... ... | — | 114.9 | 4.9 | — | 193.4 | — | 52.8 | — | 26.3 | — | — | 55.7 |
| (ஆ) அரசாங்கக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட பண விடயங்கள் ... | — | — | 8.2 | — | 0.7 | — | — | 3.5 | 10.2 | — | 6.7 | — |
| (இ) மத்திய வங்கி வசமுள்ள இறைசேரி உண்டியல்கள், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடைமைகள் ... | 269.4 | — | 112.0 | — | 126.2 | — | — | 19.7 | — | 45.9 | 61.5 | — |
| (ஈ) மத்திய வங்கி முற்பணங்கள் ... ... | 37.5 | — | — | 7.6 | 29.5 | — | 61.0 | — | 11.7 | — | — | 47.9 |
| (உ) மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் (தேறிய) | — | 0.2 | 46.1 | — | — | 120.4 | — | 104.5 | — | 73.8 | — | 82.9 |
| (ஊ) வங்கித் துறையிடமுள்ள அரசாங்க வைப்புக்களும், இறைசேரியிலும், கச்சேரியிலும் உள்ள பண நிலுவைகளும் ... ... | — | 69.4 | 71.9 | — | — | 124.2 | 67.4 | — | 66.1 | — | — | 29.4 |
| 4. இடைப்போக்கிலுள்ள விடயங்களின் சீராக்கங்கள் ... ... | 0.2 | — | 1.7 | — | — | 1.1 | 4.7 | — | — | 0.3 | — | 0.7 |
| 5. மொத்த விரிவு/சுருக்கக் காரணிகள் ... ... | 571.2 | 465.6 | 470.8 | 501.0 | 569.2 | 485.5 | 539.0 | 356.5 | 443.4 | 267.4 | 256.3 | 250.3 |
| பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றம் | +105.6 | | —30.1 | | +83.5 | | +182.5 | | +176.0 | | +6.0 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

†† கழிவுபட்ட ஏற்றுமதி உண்டியல்களின் வெளிநிற்கும் பெறுமதி, வங்கியின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் கீழ் அடக்கப்பட்டுள்ளது.

அளவு, முக்கியமாக 1972, சனவரி[1] தொடக்கம் நெல் சந்தைக்கனுப்பல் சபைத் தொழிற்பாடுகளின் ஆரம்பத்துடன் நெல் கொள்வனவின் நிதிஉதவி வழங்கலில் ஏற்பட்ட நடைமுறை மாற்றங்கள் காரணமாகலாம்.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ஓராண்டிற்கு முன்னுள்ள தொடர்பான காலப்பகுதியின் ரூ. 313 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் ரூ.60இலட்சத்தால் அதிகரித்தது. மறுபுறம், 1971 காலப்பகுதியில் ரூ. 78இலட்சத்தால் மட்டுமே உயர்வுற்ற ஏனைய தனியார் துறைக்கான கொடுகடன் ரூ 413 இலட்சத்தால் கணிச மானளவிற்கு உயர்வுற்றது. ஆயினும் இவ்வதிகரிப்பில், ரூ. 284 இலட்சம் கொண்ட பெருந்தொகைக் கடன் ஓகத்தில் ஏற்பட்டது.

மொத்தமாக, தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வங்கிக் கொடுகடனி லிருந்து எழுந்த ரூ. 1,305 இலட்சம்கொண்ட மொத்த விரிவு, வங்கிகளில், இத்துறையின் ரூ. 337 இலட்சம்கொண்ட தவணை சேமிப்பு வைப்புக்களின் சேர்க்கையினுல் ஓரளவு குறைக்கப்பட்டது அரசாங்கக் கூட்டுத்தாபனங் களும், கூட்டுறவுகளும் சேர்ந்து ரூ. 36 இலட்சத்திற்கு வகைகூறின. ஏனைய தனியார்துறை வைப்புக்கள் 1971 இன் தொடர்பான காலப்பகுதியில் ஏற் பட்ட ரூ. 551 இலட்சம்கொண்ட பெருமளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 301 இலட்சத்தால் உயர்வுற்றன. வர்த்தக வங்கிகளின் "ஏனைய பொறுப்புக்களினதும், கணக்குகளினதும் (தேறிய)" ரூ. 142இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் கணக்கிலெடுப்பின், மொத்தமாக தனியார் துறைத் தொழிற் பாடுகளினுல் பண நிரம்பலின்மீது ஏற்பட்ட தேறிய விரிவுத் தாக்கம் ரூ.1,110 இலட்சமாக விளங்கியது.

மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் மிகையினுல் ஏற்படும் நாணய விரிவு 1971 இன் தொடர்பான காலப்பகுதி யின் ரூ. 2,900 இலட்சம்கொண்ட விரிவிற்கு மாருக ரூ. 434 இலட்சமாக விளங்கியது. நடைமுறைக் கணக்கு மீதான சென்மதி நிலுவை ஏறக்குறைய ரூ. 2,100 இலட்சம்கொண்ட பணக்குறையைக் காட்டியிருக்கையில், அரசாங்க மூலதன மீளக் கொடுப்பனவுகள் ஏறக்குறைய ரூ. 750 இலட்சமாக விளங்கின. ஆயினும், இப்பணக் குறைகளினுல் ஏற்படக்கூடிய சுருக்கத்தாக்கம், ஏறக்குறைய ரூ. 2,850 இலட்சம்தொகையை அந்நிய உதவியாகப்பெற்ற அரசாங்க வருவாய் களினுலும், தனியார் மூலதன இயக்கங்களில் ஏற்பட்ட ஏறக்குறைய ரூ. 350 இலட்சம் கொண்ட மிகையினுலும், குறுந்--தவணைக் கொடுகடனின் ஏறக் குறைய ரூ. 100 இலட்சம் கொண்டதேறிய அதிகரிப்பினுலும் மேலதிகமாக

---

1. 1972, சனவரிக்கு முன், சாதாரண வேளைகளில் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் நெல் விற்பனவு தொடர்பாக பொருள் வரவுகளை வைத்து வங்கிகளால் வழங்கப்பட்ட முற்பணங்களை அரசாங்கம் தீர்ப் பனவு செய்வதற்குச் சிறு தாமதமே ஏற்பட்டது: இம்மாதம் தொடக்கம் இம்முற்பணங்கள் நெல் சந்தைப் படுத்தற் சபையினுல் தீர்ப்பனவுசெய்யப்பட்டன. ஆனுல், அதற்கு முன்னர் முக்கியமாக அரசாங்கத்துக்கு அரிசியை விற்றுக் கொடுப்பனவைப் பெற்றிருக்கவேண்டும்: சபை நெல் குற்றலைக் கையாளுவதினுல், சபை நெல்லைக் கொள்வனவுசெய்வதற்கும் அரிசியை விற்பனவுசெய்வதற்குமிடையில் குறிப்பிடத்தக்களவு கால இடைவெளி காணப்படுகிறது. இவ்வாறு சபையினுல் வைத்திருக்கப்படும் கையிருப்புகள் (ஆலையாளரிடமுள்ள கையிருப்புமுட்பட) வங்கிக் கடனினுல் நிதி உதவப்படவேண்டும்.

ஈடுசெய்யப்பட்டது. இதன்விளைவு, வங்கித்துறையின் தேறிய வெளிநாட்டு இருப்புச்சொத்துக்களில் ஏற்பட்டரூ. 434 இலட்சம்கொண்ட அதிகரிப்பாகும்.[1]

வங்கித் துறையின் தேறிய வெளிநாட்டு இருப்புச்சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, முக்கியமாக மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கின் ரூ. 572 இலட்சம்கொண்ட அதிகரிப்பிலும், வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களின் ரூ. 45 இலட்சம்கொண்ட வீழ்ச்சியிலும், மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பொறுப்புக்களின் ரூ. 97 இலட்சம்கொண்ட அதிகரிப்பிலும் காட்டப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கிலேற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமைகளின் ரூ. 803 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும், வெளிநாட்டிலுள்ள பணத்தினதும், நிலுவைகளினதும், ரூ. 262 இலட்சங்கொண்ட வீழ்ச்சியையும் உள்ளடக்குகின்றது. பொறுப்புக்கள் பகுதியில், மத்திய வங்கியின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் ரூ. 474 இலட்சத்தால் குறைக்கப்பட்டன; ஆனால் இவ்வங்கி வசமிருக்கும் பன்னாட்டு அமைப்பு வைப்புக்கள், முக்கியமாக பன்னாட்டு நாணய நிதியிலிருந்து பெற்ற கொள்வனவுகள் மீளக்கொள்வனவுகளிலும் பார்க்க ரூ. 576 இலட்சம் மிகைவுற்று விளங்கியமையால், ரூ. 571 இலட்சத்தால் உயர்வுற்றன.

மீளப்பார்வையிடும் காலப்பகுதியில், அரசாங்கத் துறைத் தொழிற்பாடுகள், 1971இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ 54 இலட்சம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ. 1,477 இலட்சம் கொண்ட மிகப்பெருமளவு சுருக்கத்தாக்கத்தை விளைவித்தன. ஆயினும், அரசாங்கத்தின் 1970/71 ஆம் நிதியாண்டு 1971 செத்தெம்பரில் முடிவுற்றிருக்கையில், இதன் 1971/72 ஆம் நிதியாண்டு 1972 திசெம்பரில் முடிவுற்றமையால் இவ்விரு காலப்பகுதிகளையும் ஒப்பீடுசெய்வது உண்மைநிலையை எடுத்துக்காட்டத் துணைபுரியாது. நிதியாண்டொன்றின் இறுதிக்காலாண்டில் அரசாங்கக் கொடுப்பனவுகள் வழமையாகக் கூடுதலாகவிருக்கும்; 1971/72 நிதியாண்டைப் பொறுத்தவரை இறுதிக்காலாண்டு 1972 ஒற்றோபர்-திசெம்பர் காலப்பிரிவாகும்.

மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் வங்கித் துறையிடம் அரசாங்கம் பட்டகடன் 1971இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ. 23இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 354 இலட்சத்தால் குறைவுற்றது. மத்திய வங்கியின் அரசாங்கப் பத்திர உடைமைகள் ரூ. 615 இலட்சத்தால் உயர்வுற்றன; ஆனால், அரசாங்கத்திற்கான இவ்வங்கியின் தற்காலிக முற்பணங்கள் ரூ. 479 இலட்சத்தால் குறைவுற்றன. ஆகவே, மத்திய வங்கியிடம் அரசாங்கம் பட்ட கடன் சென்ற ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் ரூ. 342 இலட்சங்கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக ரூ. 136 இலட்சத்தால் உயர்வுற்றது. மறுபுறம் அரசாங்கத்திற்கான வர்த்தக வங்கிக்கொடுகடன் 1971காலப்பகுதியின் ரூ. 365 இலட்சம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக ரூ. 490 இலட்சத்

1. இப்பந்தியில் தரப்பட்டுள்ள சென்மதி நிலுவைத் தரவுகள் இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களிலும் விகிதசம, அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளன; ஆகவே, வங்கியின் தேறிய வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் முழுமையான மாற்றங்களுக்கு ஏற்ப இவை அமையமாட்டா

தால் குறைவுற்றது. அரசாங்கத்திற்கான வர்த்தக வங்கிக் கொடுகடனில் ஏற்பட்ட வீழ்ச்சி, இறைசேரி உண்டியல் உடைமைகளின் ரூ. 580 இலட்சம் கொண்ட வீழ்ச்சியில் காட்டப்பட்டுள்ளது. இவ்வீழ்ச்சி, அரசாங்கப் பிணை உடைமைகளினதும், பண உடைமைகளினதும் அதிகரிப்புக்களினுல் ஓரளவு குறைக்கப்பட்டது. மொத்தமாக, வங்கித் துறையிடம் அரசாங்கம் பட்ட கடனின் வீழ்ச்சியைவிட, 1971 காலப்பகுதியில் அரசாங்கப் பண நிலுவைகளை ரூ. 661 இலட்சத்தால் குறைத்ததற்கு மாருக இக்காலப்பகுதியில் அரசாங்கம் ரூ. 294 இலட்சம் கொண்ட தொகையை அதிகரிக்கக்கூடிய நிலையிலிருந்தது. ஆகவே, அரசாங்கத்திற்கான வங்கிக் கொடுகடன் வீழ்ச்சியினுல் ஏற்பட்ட மொத்தச் சுருக்கத் தாக்கம் ரூ 648 இலட்சமாக விளங்கியது. மத்திய வங்கியின் ''ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் (தேறிய)'' 1971இன் தொடர்பான காலப்பகுதியில் ஏற்பட்ட ரூ. 738 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ 829 இலட்சம் கொண்ட சுருக்கத்தாக்கத்தை விளைவித்தன. ஆகவே, அரசாங்கத் துறைத் தொழிற்பாடுகளினுல் பண நிரம்பலின் மீது ஏற்பட்ட தேறிய தாக்கம் ரூ. 1,477 இலட்சம் கொண்ட சுருக்கமாகும்.

1. (இ) வங்கியல்லாத் தனியார் துறையின் திரவத்தன்மை.

1969-72 ஆண்டுகளுக்கான வங்கியல்லாத் தனியார் துறையின் முதற்றர, இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் பகுப்பாய்வை அட்டவணை II (ஈ) 3 தருகின்றது.

மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் முதற்றரத் திரவ இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு புறக்கணிக்கத்தக்கதாகவிருக்கையில், இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்கள் ரூ. 1,510 இலட்சத்தால் கணிசமானளவிற்கு உயர்வுற்றன. ஆகவே, மொத்தத்தில் இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் பங்கு 1971 திசெம்பர் இறுதியில் 61.4 சதவீதத்திலிருந்து 1972 ஒகத்து இறுதியில் 62.4 சதவீதமாக உயர்வுற்றது.

முதற்றர இருப்புச் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம் கேள்வி வைப்புக்களின் ரூ. 361 இலட்சம் கொண்ட வீழ்ச்சியிலும், நாணய உடைமைகளின் ரூ. 421 இலட்சம் கொண்ட அதிகரிப்பிலும் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நாணயம் பண நிரம்பலின் விகிதமாக 1971 திசெம்பர் இறுதியில் 51.9 சதவீதத்திலிருந்து 1972 ஒகத்து இறுதியில் 53.7 சதவீதமாக உயர்வுற்றது. மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் கேள்வி வைப்புக்களின் மாதாந்தச் சராசரி அளவு ரூ. 10,139 இலட்சமாகும். இது, 1971இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ. 10,138 இலட்சம் கொண்ட சராசரி அளவிலும் பார்க்க ரூ. 1 இலட்சம் மட்டுமே அதிகமாகவிருந்தது. ஆயினும், கேள்வி வைப்புக்களின் தொகையில் ஏற்பட்ட தேக்கநிலை, இதன் பயன்பாட்டு வீத அதிகரிப்பினுல்

# அட்டவணை II (ஈ) 3

## வங்கிகளல்லாத தனியார் துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள்
### (மாத இறுதியில் உள்ளபடி)

| விபரம் | மொத்தம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | | மொ. தே. உ. இன் சதவீதம் (அ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1969 திசெ. | 1970 திசெ. | 1971 ஓகத்து | 1971 திசெ. | 1972 ஓகத்து | 1969 திசெ. | 1970 திசெ. | 1971 ஓகத்து | 1971 திசெ | 1972 ஓகத்து |
| 1. முதன்மைத் திரவ இருப்புச் சொத்துக்கள் | | | | | | | | | | |
| (அ) நாணயங்களும், குத்திகளும் ... | 1,083.9 | 935.1 | 1,122.1 | 1,115.3 | 1,157.4 | 10.1 | 8.0 | 9.5 | 9.4 | 9.1 |
| (ஆ) கேள்வி வைப்புக்கள் | 799.2 | 1,031.5 | 1,020.5 | 1,033.8 | 997.7 | 7.4 | 8.9 | 8.6 | 8.7 | 7.9 |
| மொத்தம் ... | 1,883.1 | 1,966.6 | 2,142.6 | 2,149.1 | 2,155.1 | 17.5 | 16.9 | 18.1 | 18.2 | 17.0 |
| சதவீத மாற்றம் ... | — 1.6 | + 4.4 | + 8.9 | + 0.3 | + 0.3 | | | | | |
| 2. இரண்டாந்தர திரவ இருப்புச் சொத்துக்கள் | | | | | | | | | | |
| (அ) வர்த்தக வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ... | 375.1 | 534.4 | 574.6 | 614.4 | 635.3 | 3.5 | 4.6 | 4.9 | 5.2 | 5.0 |
| (ஆ) அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ... | 490.5 | 594.4 | 605.4 | 659.0* | — | 4.6 | 5.1 | 5.1 | 5.6 | — |
| (இ) இலங்கைச் சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்புவைப்புக்கள் | 102.4 | 113.3 | 160.6 | 197.7* | — | 0.9 | 1.0 | 1.4 | 1.7 | — |
| (ஈ) தேசிய சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் | — | — | — | — | 842.7 | — | — | — | — | 6.7 |
| (உ) வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக்கள் ... | 594.3 | 613.8 | 643.5 | 671.4 | 684.2 | 5.5 | 5.3 | 5.4 | 5.7 | 5.4 |
| (ஊ) தேசிய சேமிப்பு வங்கியிடமுள்ள தவணை வைப்புக்கள் | — | — | — | — | 43.9 | — | — | — | — | 0.3 |
| (எ) குடியிருப்போரின் அந்நிய நிலுவைகள் | — | — | — | — | — | — | — | — | — | — |
| (ஏ) சேமிப்புச் சான்றிதழ்கள் ... | 86.3 | 73.1 | 66.8 | 65.3 | 62.0 | 0.8 | 0.6 | 0.6 | 0.6 | 0.5 |
| (ஐ) இறைவரி உண்டியல்கள் ... | 15.4 | 12.7 | 12.2 | 13.3 | 13.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| (ஒ) வரி ஒதுக்கு நிதிச் சான்றிதழ்கள் ... | 15.8 | 43.5 | 45.4 | 53.1 | 53.5 | 0.1 | 0.4 | 0.4 | 0.4 | 0.4 |
| (ஓ) அரசாங்க முறிகள் ... | 937.4 | 1,024.2 | 1,115.7 | 1,148.7 | 1,239.2 | 8.7 | 8.8 | 9.4 | 9.7 | 9.8 |
| மொத்தம் ... | 2,617.2 | 3,009.4 | 3,224.2 | 3,422.9* | 3,573.9 | 24.3 | 25.9 | 27.3 | 28.9 | 28.2 |
| சதவீத மாற்றம் ... | + 9.6 | + 15.0 | + 7.1 | + 6.2 | + 4.4 | | | | | |
| 3. தனியார் துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள் ... | 4,500.3 | 4,976.0 | 5,366.8 | 5,572.0 | 5,729.0 | 41.9 | 42.8 | 45.4 | 47.1 | 45.2 |
| சதவீத மாற்றம் ... | + 4.7 | + 10.6 | + 7.8 | + 3.8 | + 2.8 | 18.8 | | | | |
| அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்புவங்கி, ஊழியர் சேமநிதி போன்ற நிதித்தாபனங்கள் வசமுள்ள இறைசேரி உண்டியல்கள், அரசாங்க முறிகள் ஆகியவற்றின் உடைமைகள், மேலே சேர்க்கப்படவில்லை. ... | 2,026.5 | 2,168.9 | 2,594.7 | 2,735.6 | 3,060.0 | 18.8 | 18.7 | 21.9 | 23.1 | 24.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* தற்காலிகமானவை.

1 நிலையான வைப்புக்களையும் உள்ளடக்கும்.

(அ) நடைமுறைச் சந்தைக்கோள் விலைகளின்படி.

ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது; இதன் மாதாந்தச் சராசரி 1971 காலப்பகுதியில் 1.99 இலிருந்து 2.17 ஆக உயர்வுற்றது. மறுபுறம் பொது மக்கள் வசமுள்ள நாணய உடைமைகளின் மாதாந்தச் சராசரி அளவு 1971இன் தொடர்பான காலப்பகுதிச் சராசரியிலும் பார்க்க ரூ. 501 இலட்சம் அதிகமாகவிருந்தது. ஆகவே, பொது மக்களின் கொடுக்கல்வாங்கல்களில் நாணயத்தின் அதிகரித்த பங்கு வெளிப்படையாகத் தெரிகின்றது; சென்ற ஆண்டறிக்கையில் இப்பண்பையொட்டிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பணநிரம்பலின் நாணய உறுப்பில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கையில், நாணய வெளியீட்டில், பெரும் இனத்தாள்களின் பங்கிலும் அதிகரிப்பு ஏற்பட்டது. 1970, 1971ஆம் ஆண்டுகளின் இறுதி மொத்த நாணய வெளியீட்டில், ரூ. 100/-, ரூ. 50/- இனத்தாள்கள் இரண்டும் சேர்ந்து முறையே 47.0 சதவீதமாகவும், 57.1 சதவீதமாகவும் அமைந்து, 1972 ஓகத்து இறுதியில் 60.9 சதவீதமாக உயர்வுற்றன. பண நிரம்பலின் உறுப்புக்களும், நாணய அமைப்பும் அட்டவணைகள் II (ஈ) 4இலும், II (ஈ) 5இலும் காட்டப்பட்டுள்ளன.

## அட்டவணை II (ஈ) 4
## பணநிரம்பலின் கூறுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலப்பகுதி முடிவில் | பொதுமக்களிடமுள்ள நாணயம் | | பொதுமக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் | | மொத்தப் பணநிரம்பல் |
|---|---|---|---|---|---|
| | தொகை | மொத்தப் பண நிரம்பலின் சதவீதமாக | தொகை | மொத்தப் பண நிரம்பலின் சதவீதமாக | |
| 1958 ... | 529.8 | 49.2 | 546.9 | 50.8 | 1,076.8 |
| 1959 ... | 565.0 | 48.0 | 612.7 | 52.0 | 1,177.7 |
| 1960 ... | 595.3 | 49.2 | 613.6 | 50.8 | 1,208.9 |
| 1961 ... | 692.2 | 53.8 | 596.4 | 46.2 | 1,288.6 |
| 1962 ... | 712.6 | 53.1 | 630.0 | 46.9 | 1,342.7 |
| 1963 ... | 828.4 | 55.0 | 677.7 | 45.0 | 1,506.0 |
| 1964 ... | 853.0 | 52.6 | 768.8 | 47.4 | 1,621.8 |
| 1965 ... | 901.4 | 52.5 | 814.3 | 47.5 | 1,715.7 |
| 1966 ... | 882.5 | 53.2 | 776.4 | 46.8 | 1,658.9 |
| 1967 ... | 979.9 | 54.2 | 827.7 | 45.8 | 1,807.6 |
| 1688 ... | 1,066.2 | 55.7 | 847.0 | 44.3 | 1,913.2 |
| 1969 ... | 1,083.9 | 57.6 | 799.2 | 42.4 | 1,883.1 |
| 1970 ... | 935.1 | 47.6 | 1,031.5 | 52.4 | 1,966.6 |
| 1971 ... | 1,815.3 | 51.9 | 1,033.8 | 48.1 | 2,149.1 |
| 1972ஓகத்து ... | 1,157.4 | 53.7 | 997.7 | 46.3 | 2,155.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

### அட்டவணை II (ஈ) 5

### நாணய அமைப்பு — 100 50, 10, 5 ரூபாய்களைக் கொண்ட இனங்களின்படி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலப்பகுதி முடிவில் | ரூ. 100 | ரூ. 50 | ரூ. 10 | ரூ. 5 | நாணய வெளியீடு |
|---|---|---|---|---|---|
| 1957 | 116.5 | 116.7 | 155.8 | 29.9 | 475.1 |
| 1958 | 157.5 | 143.6 | 184.0 | 33.7 | 578.3 |
| 1959 | 174.5 | 152.1 | 193.5 | 36.2 | 621.3 |
| 1960 | 148.4 | 148.4 | 237.6 | 40.1 | 644.6 |
| 1961 | 211.9 | 180.3 | 254.6 | 42.1 | 763.8 |
| 1962 | 238.2 | 186.8 | 241.9 | 42.8 | 789.4 |
| 1963 | 275.3 | 236.7 | 257.6 | 46.5 | 900.9 |
| 1964 | 168.4 | 258.3 | 359.5 | 55.5 | 932.1 |
| 1965 | 239.9 | 297.8 | 319.7 | 50.5 | 1,002.8 |
| 1966 | 272.0 | 292.9 | 288.2 | 48.6 | 993.7 |
| 1967 | 316.2 | 313.1 | 296.3 | 51.3 | 1,072.8 |
| 1968 | 393.7 | 330.6 | 299.5 | 55.3 | 1,181.9 |
| 1969 | 435.7 | 322.9 | 293.7 | 54.1 | 1,212.7 |
| 1970 | 252.0 | 261.0 | 384.4 | 71.4 | 1,090.4 |
| 1971 | 421.1 | 312.9 | 353.1 | 70.7 | 1,285.1 |
| 1972 | 532.4 | 351.4 | 353.9 | 74.9 | 1,444.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

* 2, 1 ரூபா இனத் தாள்களும், சகல நாணயக் குத்திகளும் அடங்கும்.

வர்த்தக வங்கிகள் வசமுள்ள தனியார் துறை வைப்புக்களின் உடைமையாளர்களை அட்டவணை II (ஈ) 6 காட்டுகின்றது. இவ்வட்டவணைக்கான தரவுகள், வங்கிகளிடமிருந்து காலாண்டு அடிப்படையில் பெறப்பட்டுள்ளன; 1972 செத்தெம்பர் 1 இல் ஆரம்பித்த வேலைநிறுத்தத்தினால் 1972 இன் இறுதி இரு காலாண்டுகளுக்குமான தரவுகளை வங்கிகள் சமர்ப்பிக்கமுடியவில்லை. ஆகவே இப்பகுப்பாய்வு முதலரை ஆண்டிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

1972இன் முதலரைப் பகுதியில் வியாபாரத் துறைக் கேள்வி வைப்புக்களின் ரூ. 113 இலட்சம் கொண்ட அதிகரிப்பு, வியாபாரமல்லாத் துறை வைப்புக்களின் ரூ. 267 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினால் முற்றாக ஈடுசெய்யப்பட்டது; இதன் விளைவால் தனியார் மொத்தக் கேள்வி வைப்புக்கள் ரூ. 154 இலட்சத்தால் குறைவுற்றன. இது, சென்ற ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் வியாபாரத் துறைக்கேள்வி வைப்புக்களின் ரூ. 24 இலட்சம் கொண்ட அதிகரிப்பு, வியாபாரமல்லாத் துறை வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 239 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினால் ஈடுசெய்யப்பட்டு, மொத்தமாகப் பார்க்கும்போது, தனியார்துறை வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 215 இலட்சம் கொண்ட வீழ்ச்சியின் நிலைமையைப் போன்றுள்ளது. வர்த்தகத் தாபன வைப்புக்களின் ரூ. 490 இலட்சம் கொண்ட கணிசமானளவு அதிகரிப்பும், தயாரிப்புத் தாபனங்களினதும், பெருந்தோட்டங்களினதும், வைப்புக்களில் ஏற்பட்ட முறையே ரூ. 295 இலட்சம், ரூ. 93 இலட்சம் கொண்ட வீழ்ச்சிகளுமே வியாபாரத் துறைக் கேள்வி வைப்புக்களின் மாற்றத்தில் ஏற்பட்ட முக்கிய பண்புகளாகும். வியாபாரமல்லாத் துறைக் கேள்வி வைப்புக்களில் ஏற்பட்ட மாற்

## அட்டவணை II (ஈ) 6

### வர்த்தக வங்கிகளிடமுள்ள தனியார் துறையின் கேள்வி, தவணை, சேமிப்பு வைப்புக்களின் உடைமையாளர்கள் (காலப்பகுதி முடிவில் உள்ளபடி)

(தொகை: பத்து இலட்சம் ரூபாய்களில்)

| உடைமையாளர் | கேள்வி | | தவணை | | சேமிப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % | தொகை | % | தொகை | % |
| **நிதி நிறுவனங்கள்:** | | | | | | | | |
| 1970 திசெம்பர் | 56.1 | 5.7 | 135.3 | 24.0 | 16.3 | 3.0 | 207.7 | 10.0 |
| 1971 மாச்சு | 55.1 | 5.7 | 131.5 | 23.3 | 18.7 | 3.4 | 205.3 | 9.9 |
| 1971 யூன் | 55.9 | 5.8 | 131.0 | 24.0 | 18.3 | 3.2 | 205.3 | 9.9 |
| 1971 செத்தெம்பர் | 47.8 | 4.9 | 126.6 | 22.3 | 18.1 | 3.1 | 192.5 | 9.1 |
| 1971 திசெம்பர் | 59.0 | 5.9 | 123.1 | 21.4 | 18.8 | 3.1 | 200.9 | 9.2 |
| 1972 மாச்சு | 54.2 | 5.8 | 122.7 | 21.9 | 18.8 | 3.0 | 195.6 | 9.3 |
| 1972 யூன் | 60.1 | 6.1 | 114.9 | 20.5 | 19.3 | 3.0 | 194.3 | 8.9 |
| **பெருந்தோட்டங்கள்:** | | | | | | | | |
| 1970 திசெம்பர் | 56.8 | 5.8 | 42.1 | 7.5 | 0.3 | 0.1 | 99.2 | 4.8 |
| 1971 மாச்சு | 89.1 | 9.2 | 42.8 | 7.6 | 0.4 | 0.1 | 132.3 | 6.4 |
| 1971 யூன் | 64.4 | 6.7 | 37.5 | 6.9 | 0.4 | 0.1 | 102.3 | 4.9 |
| 1971 செத்தெம்பர் | 66.8 | 6.9 | 30.4 | 5.4 | 0.2 | ... | 97.4 | 4.6 |
| 1971 திசெம்பர் | 61.2 | 6.2 | 30.4 | 5.3 | 0.5 | 0.1 | 92.2 | 4.2 |
| 1972 மாச்சு | 56.2 | 6.0 | 28.2 | 5.0 | 0.3 | ... | 84.7 | 4.0 |
| 1972 யூன் | 51.9 | 5.3 | 21.3 | 3.8 | 0.6 | 0.1 | 73.9 | 3.4 |
| **வர்த்தகம்:** | | | | | | | | |
| 1970 திசெம்பர் | 185.1 | 18.8 | 94.6 | 16.8 | 6.4 | 1.2 | 286.1 | 13.7 |
| 1971 மாச்சு | 172.7 | 17.9 | 97.4 | 17.2 | 7.2 | 1.3 | 277.3 | 13.3 |
| 1971 யூன் | 176.8 | 18.4 | 97.9 | 17.9 | 8.1 | 1.4 | 282.9 | 13.6 |
| 1971 செத்தெம்பர் | 150.8 | 15.6 | 119.7 | 21.1 | 8.6 | 1.5 | 279.1 | 13.2 |
| 1971 திசெம்பர் | 146.5 | 14.8 | 102.2 | 17.8 | 9.9 | 1.6 | 258.7 | 11.9 |
| 1972 மாச்சு | 129.0 | 13.8 | 80.2 | 14.3 | 10.4 | 1.7 | 219.7 | 10.4 |
| 1972 யூன் | 195.5 | 20.0 | 90.3 | 16.1 | 11.5 | 1.8 | 297.4 | 13.7 |
| **தயாரிப்புத் தாபனங்கள்:** | | | | | | | | |
| 1970 திசெம்பர் | 98.9 | 10.0 | 41.7 | 7.4 | 0.4 | 0.1 | 141.0 | 6.8 |
| 1971 மாச்சு | 109.7 | 11.3 | 39.8 | 7.0 | 0.2 | ... | 149.8 | 7.2 |
| 1971 யூன் | 98.3 | 10.2 | 24.3 | 4.5 | 0.1 | ... | 122.6 | 5.9 |
| 1971 செத்தெம்பர் | 116.8 | 12.0 | 30.5 | 5.4 | 0.5 | ... | 147.8 | 7.0 |
| 1971 திசெம்பர் | 138.6 | 13.9 | 32.0 | 5.6 | 3.0 | 0.5 | 173.6 | 8.0 |
| 1972 மாச்சு | 119.2 | 12.8 | 32.3 | 5.8 | 2.0 | 0.3 | 153.5 | 7.3 |
| 1972 யூன் | 109.1 | 11.2 | 38.1 | 6.8 | 3.5 | 0.5 | 150.8 | 6.9 |
| **ஏனைய வியாபாரம்:** | | | | | | | | |
| 1970 திசெம்பர் | 107.0 | 10.9 | 50.7 | 9.0 | 8.2 | 1.5 | 165.9 | 8.0 |
| 1971 மாச்சு | 109.1 | 11.3 | 54.7 | 9.7 | 8.8 | 1.6 | 172.5 | 8.3 |
| 1971 யூன் | 110.9 | 11.5 | 49.2 | 9.0 | 11.0 | 1.9 | 171.1 | 8.2 |
| 1971 செத்தெம்பர் | 126.8 | 13.1 | 55.4 | 9.8 | 7.2 | 1.2 | 189.4 | 9.0 |
| 1971 திசெம்பர் | 116.1 | 11.7 | 69.3 | 12.0 | 9.6 | 1.6 | 195.0 | 8.9 |
| 1972 மாச்சு | 110.8 | 11.9 | 77.2 | 13.8 | 8.8 | 1.4 | 196.7 | 9.3 |
| 1972 யூன் | 116.1 | 11.9 | 71.7 | 12.8 | 9.2 | 1.4 | 197.1 | 9.0 |
| **உள்ளூர் ஆட்சி மன்றங்கள்:** | | | | | | | | |
| 1970 திசெம்பர் | 16.9 | 1.7 | 12.2 | 2.2 | 0.2 | ... | 29.3 | 1.4 |
| 1971 மாச்சு | 18.4 | 1.9 | 12.1 | 2.1 | 0.2 | .. | 30.8 | 1.5 |
| 1971 யூன் | 21.3 | 2.2 | 12.4 | 2.3 | 0.2 | ... | 33.9 | 1.6 |
| 1971 செத்தெம்பர் | 26.2 | 2.7 | 12.3 | 2.2 | 0.3 | ... | 38.8 | 1.8 |
| 1971 திசெம்பர் | 31.4 | 3.2 | 11.7 | 2.0 | 0.3 | ... | 43.4 | 2.0 |
| 1972 மாச்சு | 33.5 | 3.6 | 11.3 | 2.0 | 0.2 | ... | 45.1 | 2.1 |
| 1972 யூன் | 34.4 | 3.5 | 12.1 | 2.2 | 0.2 | ... | 46.8 | 2.1 |
| **வியாபாரத் தொடர்பற்ற நிறுவனங்கள்:** | | | | | | | | |
| 1970 திசெம்பர் | 59.7 | 6.1 | 54.2 | 9.6 | 7.8 | 1.5 | 121.7 | 5.8 |
| 1971 மாச்சு | 58.1 | 6.0 | 53.2 | 9.4 | 7.5 | 1.4 | 118.8 | 5.7 |
| 1971 யூன் | 61.6 | 6.4 | 55.8 | 10.2 | 7.7 | 1.3 | 125.0 | 6.0 |
| 1971 செத்தெம்பர் | 62.1 | 6.4 | 46.1 | 8.1 | 7.3 | 1.3 | 115.6 | 5.5 |
| 1971 திசெம்பர் | 58.8 | 5.9 | 46.6 | 8.1 | 8.2 | 1.3 | 113.6 | 5.2 |
| 1972 மாச்சு | 54.5 | 5.8 | 47.5 | 8.5 | 8.5 | 1.4 | 110.5 | 5.2 |
| 1972 யூன் | 62.7 | 6.4 | 47.3 | 8.4 | 8.2 | 1.3 | 118.2 | 5.4 |
| **தனியாட்கள்:** | | | | | | | | |
| 1970 திசெம்பர் | 403.6 | 41.0 | 132.4 | 23.5 | 496.0 | 92.6 | 1032.0 | 49.5 |
| 1971 மாச்சு | 354.2 | 36.6 | 133.2 | 23.6 | 503.5 | 92.1 | 991.0 | 47.7 |
| 1971 யூன் | 373.4 | 38.8 | 137.2 | 25.2 | 526.4 | 92.0 | 1037.1 | 49.9 |
| 1971 செத்தெம்பர் | 372.4 | 38.4 | 146.3 | 25.8 | 534.3 | 92.7 | 1053.1 | 49.8 |
| 1971 திசெம்பர் | 381.3 | 38.4 | 160.2 | 27.8 | 564.0 | 91.8 | 1105.5 | 50.6 |
| 1972 மாச்சு | 375.6 | 40.2 | 161.1 | 28.7 | 566.3 | 92.1 | 1102.9 | 52·3 |
| 1972 யூன் | 347.7 | 35.6 | 166.0 | 29.5 | 586.2 | 91.8 | 1099.9 | 50.5 |
| **மொத்தம்:** | | | | | | | | |
| 1970 திசெம்பர் | 984.1 | 100.0 | 563.1 | 100.0 | 535.6 | 100.0 | 2082.8 | 100.0 |
| 1971 மாச்சு | 966.5 | 100.0 | 564.9 | 100.0 | 546.5 | 100.0 | 2077.9 | 100.0 |
| 1971 யூன் | 962.6 | 100.0 | 545.3 | 100.0 | 572.2 | 100.0 | 2080.1 | 100.0 |
| 1971 செத்தெம்பர் | 969.7 | 100.0 | 567.3 | 100.0 | 576.5 | 100.0 | 2113.7 | 100.0 |
| 1971 திசெம்பர் | 993.0 | 100.0 | 575.6 | 100.0 | 614.4 | 100.0 | 2183.0 | 100.0 |
| 1972 மாச்சு | 933.1 | 100.0 | 560.6 | 100.0 | 615.2 | 100.0 | 2108.9 | 100.0 |
| 1972 யூன் | 977.6 | 100.0 | 561.8 | 100.0 | 638.8 | 100.0 | 2178.3 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

றத்தில் தனியாட்கள் வசமுள்ள வைப்புக்களின் ரூ. 336 இலட்ச வீழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். சென்ற ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் ஏற்பட்ட ரூ. 302 இலட்சங்கொண்ட வீழ்ச்சிக்கு ஏற்ப இவ்வீழ்ச்சி அமைந்திருந்தது. மொத்தக் கேள்வி வைப்புக்களில் தனியாட்களின் பங்கு 1970 யூன் இறுதியில் 42.7 சதவீதமாக அமைந்து, ஓராண்டிற்குப் பின் 38.8 சதவீதமாகவும் 1972 யூன் இறுதியில் 35.6 சதவீதமாகவும் வீழ்ச்சியுற்றது.

வர்த்தக வங்கிகளிலுள்ள தனியார்துறை வசமுள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள் 1971இன் முதலரை ஆண்டிலுள்ள அமைப்பைப் போன்றிருந்தன. தவணை வைப்புக்கள் ரூ. 138 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், சேமிப்பு வைப்புக்கள் ரூ. 244 இலட்சத்தால் உயர்வுற்றிருந்தன. 1971இன் முதலரைப் பகுதியில் தவணை வைப்புக்கள் ரூ. 178 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், சேமிப்பு வைப்புக்கள் ரூ. 366 இலட்சத்தால் உயர்வுற்றன. நிதி நிறுவனங்களினதும், பெருந்தோட்டங்களினதும், வர்த்தகத் தாபனங்களினதும் தவணை வைப்புக்கள் முறையே ரூ. 82 இலட்சத்தாலும், ரூ. 91 இலட்சத்தாலும், ரூ 119 இலட்சத்தாலும் குறைவுற்றிருக்கையில், தயாரிப்புத் தாபனங்களினதும், தனியாட்களினதும் வைப்புக்கள் முறையே ரூ. 61 இலட்சத்தாலும், ரூ. 58 இலட்சத்தாலும் உயர்வுற்றன. வழமைபோன்று சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பு ஏறக்குறைய முற்றிலும் தனியாட்களின் வைப்புக்களிலேயே காட்டப்பட்டுள்ளது. வங்கியல்லாத் தனியார் துறையின் மொத்த இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களில், வர்த்தக வங்கிகளிலுள்ள தவணை வைப்புக்களும், சேமிப்பு வைப்புக்களும் சேர்ந்து 1971 ஓகத்து இறுதியில் 37.8 சதவீதமாக அமைந்தமைக்கு மாறாக 1972 ஓகத்து இறுதியில் 36.9 சதவீதமாக அமைந்தன.

அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியையும், இலங்கைச் சேமிப்பு வங்கியையும், சேமிப்புச் சான்றிதழ் நிதியையும் இணைத்ததனால் உருவாகிய தேசிய சேமிப்பு வங்கி, 1972 ஏப்பிறல் 1 இல் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. 1972 ஓகத்து இறுதியில் இவ்வங்கியின் மொத்த வைப்புக்கள், 1971 திசெம்பர் இறுதியில் இணைக்குமுன்னிருந்த இவ்விரு வங்கி வைப்புக்களின் அளவிலும் பார்க்க ரூ. 299 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. 1971 இன் தொடர்பான காலப்பகுதியில் இவ்வங்கிகளின் மொத்த வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 583 இலட்சத்தில் மிக அதிகமாகவிருந்தது. வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 299 இலட்சம் கொண்ட அதிகரிப்பு நிலையான வைப்புக்களின் ரூ. 189 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், சேமிப்பு வைப்புக்களின் ரூ. 110 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் கொண்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி, வர்த்தக வங்கிகளின் வட்டி வீதத்திலும் பார்க்க 2.7 சதவீதம் கூடிய வீதத்தைக் கொடுத்தபோதும், இவற்றிலும் பார்க்க மிகப்பரந்த எல்லைப் பரப்பை உள்ளடக்கியபோதும், இதே காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளில் சேர்க்கப்பட்ட சேமிப்பு வைப்புக்கள் ரூ. 209 இலட்சத்தில் கணிசமானளவு அதிகமாகவிருந்தன.

வங்கியல்லாத் தனியார் துறையின் அரசாங்கத்தின் மீதான உரிமைகள் 1971இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ 929 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மீளப்பாரவையிடும் காலப்பகுதியில் ரூ. 907 இலட்சத்தால் உயர்வுற்றன. இறைசேரி உண்டியல் உடமைகளினதும், வரி ஒதுக்குச் சான்றிதழ்களினதும் அதிகரிப்பு புறக்கணிக்கத்தக்கதாகவிருக்கையில், அரசாங்க முறி உடைமைகள் ரூ. 905 இலட்சத்தால் உயர்வுற்றன. வங்கியல்லாத் தனியார் துறையினது மொத்த உடைமைகளின் அதிகரிப்பில், அரசாங்க முறி உடைமைகள் ரூ. 506 இலட்சத்தால் உயர்வுற்ற காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழமைபோல் அரைப்பங்கிலும் கூடியதாய் அமைந்தது. ஊழியர் சேமநிதியைத் தவிர்த்து நம்பிக்கைச் சொத்துக்கள், உபகார இளைப்பாறற் சேமநிதிகள் தமது உடைமைகளை ரூ. 409 இலட்சத்தால் அதிகரித்தன.

சென்ற ஈராண்டு அறிக்கைகளிலும் எடுத்துக் காட்டப்பட்டதுபோன்று மொத்தமாக, வங்கியல்லாத் தனியார் துறையின் இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியுறும்போக்கு மீளப் பார்வையிடும் காலப்பகுதியிலும் தொடர்ந்து காணப்பட்டது. மொத்த இரண்டாந்தரத் திரவ இருப்புச்சொத்துக்களில் அரசாங்கத்தின்மீதான உரிமைகளின் பங்கும் 1971, திசெம்பர் இறுதியில் 35.5 சதவீதத்திலிருந்து தொடர்ந்து 1972 ஓகத்து இறுதியில் 36.5 சதவீதமாக உயர்வுற்றது ஆயினும், தொடர்ந்தும் நிறுவன முதலீட்டாளர்களே ஏறக்குறைய முற்றிலும் அரசாங்க உரிமைகளுக்குக் காரணமாயமைந்தனர் முதற்றரத் திரவ இருப்புச் சொத்துக்களின் வளர்ச்சியில் காணப்படும் நம்பிக்கையற்ற பண்பு யாதெனில், கேள்வி வைப்புக்களுக்குப் பதிலாக நாணய உடைமைகள் அதிகரிப்பதேயாகும். சகல நிதி இருப்புச்சொத்துக்களுக்கும் சேர்ந்து 1971 இறுதியில் மொத்தத் தேசிய உற்பத்தியில் 47.1 சதவீதமாக அமைந்தமைக்கு மாறாக 1972 ஓகத்தில் 45.2 சதவீதமாக அமைந்தன.

**1 (ஈ) வட்டி வீதங்கள்:**

தேசிய சேமிப்பு வங்கி, சேமிப்புச் சான்றிதழ்களின் வீதத்தை 5 சதவீதத்திலிருந்து 1972 மேயில் 11 சதவீதமாக மாற்றியதை விட, மீளப்பார்வையிடும் காலப்பகுதி வட்டி வீதங்களில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை.

**2. (அ) வர்த்தக வங்கித்தொழில் — முக்கிய போக்குகள்**

மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளில் திரட்டப்படும் பொருள்வளங்களின் சேர்க்கை, பண நிரம்பலின் ரூ. 60 இலட்சம் கொண்ட சாதாரண அதிகரிப்பை நோக்குமிடத்து பொது மக்களின் நாணய உடைமைகளின் ரூ. 421 இலட்சம் கொண்ட கணிசமானளவு அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளின் தவணை, சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் மிகப் பெருமளவினதல்ல. இவை, சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கிகளின் திரவத்தன்மையைக் குறைக்கும் விளைவை ஏற்படுத்தின. எனினும், இவற்றின் திரவ நிலை மிக ஆறுதலளிக்கும்

நிலையிலிருந்து; இது, மொத்த வைப்புக்களுக்கான திரவ இருப்புச்சொத்துக்களின் மாதாந்தச் சராசரி விகிதம் 1969ஆம், 1970ஆம் ஆண்டுகளின் முறையே 32.4, 30.8 சதவீதங்களிலும் பார்க்க 33.9 சதவீதத்தில் அதிகமாக விருந்ததிலிருந்து தெரிகிறது. ஆயினும், மொத்த வைப்புக்களுக்கான பணத்தின் விகிதம் 1971இன் தொடர்பான காலப் பகுதியிலும் பார்க்க அதிகமாகவிருந்தது. மத்திய வங்கியிலிருந்து பெற்ற கடன்பாடுகள் சராசரி அளவில் சிறிது குறைவுற்றிருந்தன.

**2. (ஆ) வங்கி இருப்புச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அமைப்பு**

மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளின் மொத்த இருப்புச்சொத்துக்கள் / பொறுப்புக்களில் ஏற்பட்ட ரூ. 455 இலட்சம் கொண்ட அதிகரிப்பு சென்றாண்டின் தொடர்பான காலப்பகுதியின் ரூ. 512 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடற்பாலது. பொறுப்புக்கள் பகுதியில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் 'ஏனைய பொறுப்புக்களின்' ரூ. 901 இலட்சம்கொண்ட கூர்மையான வீழ்ச்சியும், வங்கிகளுக்கிடையே ரூ. 936 இலட்சம் கொண்ட கடன்பாடுகளின் அதிகரிப்புமாகும். 1971இன் தொடர்பான காலப்பகுதில் 'ஏனைய பொறுப்புக்கள்' ரூ. 65 இலட்சத்தால் உயர்வுற்றிருக்கையில், வங்கிகளுக்கிடையிலான கடன்பாடுகள் ரூ. 275 இலட்சத்தால் குறைவுற்றன வைப்புக்கள் ரூ. 353 இலட்சத்தால் உயர்வுற்றன; இவை அரசாங்க வைப்புக்களின் ரூ. 393 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், தனியார்துறை வைப்புக்களின் ரூ. 40 இலட்சம் கொண்ட வீழ்ச்சியையும் உள்ளடக்குகின்றன. 1971இன் தொடர்பான காலப்பகுதியில் வைப்புக்கள் ரூ. 503 இலட்சத்தால் உயர்வுற்று தனியார் துறை வைப்புக்களில் ரூ. 611 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், அரசாங்க வைப்புக்களில் ரூ. 109 இலட்சம் கொண்ட வீழ்ச்சியையும் காட்டின. இவ்வங்கிகளின் மூலதனமும், ஒதுக்கும் 1971 காலப்பகுதியின் ரூ. 239 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் ரூ. 70 இலட்சத்தால் உயர்வுற்றன.

வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்களில், கடன்களும் முற்பணங்களும் 1971இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ. 954 இலட்சம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 445 இலட்சத்தால் உயர்வுற்றன. நிலையான இருப்புச்சொத்துக்களும், ஏனைய இருப்புச்சொத்துக்களும் 1971 காலப் பகுதியின் ரூ. 278 இலட்சம்கொண்ட சிறு வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ. 690 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. பண உடைமைகள் (நியதிச் சட்ட ஒதுக்குகள் உட்பட) 1971 காலப்பகுதியின் ரூ. 103 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக ரூ. 332 இலட்சம் கொண்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. இறைசேரி உண்டியல் உடைமைகளும் 1971இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ. 146 இலட்சம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக ரூ. 580 இலட்சத்தால் குறைவுற்றன ஆகவே, 1972ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வங்கிகளின் திரவநிலை, 1971இன் தொடர்பான காலப்பகுதி நிலையைப்போன்று அதிகமாகவிருக்கவில்லை; ஆனால் ஏற்கெனவே, குறிப்பிட்டதுபோன்று 1969ஆம் 1970ஆம் ஆண்டுகளுடன் நோக்கும்போது 1972இன் திரவநிலை அதிகமாகவிருந்தது. உண்மையில் 1971இல் இவ்வங்கிகள்

## அட்டவணை II (ச) 7

### வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள் பொறுப்புக்கள் முதலியவற்றின் பங்கீடுகள்

(மாத எண்தொகைகளின் சராசரி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970* | 1971 | 1971 இன் முதல் எட்டு மாதங்கள் | 1972 இன் முதல் எட்டு மாதங்கள் | காலப் பகுதி முடிவில் 1971 ஒகத்து | காலப் பகுதி முடிவில் 1972 ஒகத்து |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையிருப்பிலுள்ள பணமும், மத்திய வங்கியிலுள்ள வைப்புக்களும் (நியதிச் சட்ட முறையான ஒதுக்குப் பணமும் உட்பட) ... | 186 | 164 | 182 | 224 | 233 | 218 | 247 | 250 | 248 | 369 | 357 | 382 | 360 | 344 |
| வெளிநாட்டு நிலுவைகள் ... | 55 | 44 | 49 | 55 | 62 | 57 | 72 | 63 | 36 | 51 | 52 | 57 | 51 | 67 |
| இறைசேரி உண்டியல்கள் ... ... | 89 | 128 | 73 | 89 | 124 | 80 | 102 | 50 | 41 | 308 | 306 | 269 | 296 | 263 |
| கழிவுசெய்யப்பட்ட உண்டியல்கள் ... | 136 | 114 | 126 | 173 | 175 | 198 | 252 | 241 | 275 | 158 | 156 | 153 | 170 | 149 |
| மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள் ... ... | 466 | 450 | 430 | 541 | 594 | 553 | 673 | 604 | 600 | 886 | 871 | 861 | 877 | 823 |
| மொத்த முதலீடுகள்** ... ... | 303 | 313 | 330 | 329 | 330 | 300 | 278 | 275 | 263 | 373 | 371 | 377 | 374 | 377 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப்பற்றுக்களும் ... ... | 477 | 495 | 633 | 669 | 682 | 809 | 1000 | 1240 | 1391 | 1490 | 1465 | 1630 | 1473 | 1661 |
| கேள்வி வைப்புக்கள்† ... ... ... | 829 | 789 | 853 | 917 | 949 | 914 | 955 | 945 | 958 | 1219 | 1216 | 1213 | 1203 | 1194 |
| தவணை வைப்புக்களும், சேமிப்பு வைப்புக்களும் ... ... | 380 | 460 | 535 | 572 | 631 | 649 | 798 | 915 | 989 | 1238 | 1214 | 1328 | 1241 | 1353 |
| மொத்த வைப்புக்கள் ... ... ... ... | 1209 | 1250 | 1389 | 1490 | 1580 | 1564 | 1755 | 1863 | 1948 | 2458 | 2431 | 2543 | 2444 | 2551 |
| விகிதம் ... ... ... ... | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் ... | 22.4 | 20.8 | 21.3 | 24.4 | 24.5 | 23.8 | 25.9 | 26.4 | 25.9 | 30.3 | 29.4 | 31.5 | 29.9 | 28.8 |
| மொத்த வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் ... ... | 15.4 | 13.1 | 13.1 | 15.0 | 14.7 | 13.9 | 14.1 | 13.4 | 12.7 | 15.0 | 14.7 | 15.0 | 14.7 | 13.5 |
| மொத்த வைப்புக்களுக்கு அந்நிய நிலுவைகளின் விகிதம் ... | 4.5 | 3.5 | 3.5 | 3.7 | 3.9 | 3.6 | 4.1 | 3.4 | 1.8 | 2.1 | 2.1 | 2.2 | 2.1 | 2.6 |
| மொத்த வைப்புக்களுக்கு இறைசேரி உண்டியல்களின் விகிதம் ... | 7.4 | 10.2 | 5.3 | 6.0 | 7.8 | 5.1 | 5.8 | 2.7 | 2.1 | 12.5 | 12.6 | 10.6 | 12.1 | 10.3 |
| மொத்த வைப்புக்களுக்குக் கழிவுசெய்யப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் ... ... | 11.2 | 9.1 | 9.1 | 11.6 | 11.1 | 12.7 | 14.4 | 12.9 | 14.1 | 6.4 | 6.4 | 6.0 | 6.9 | 5.8 |
| கேள்வி வைப்புக்களுக்குத் திரவச் சொத்துக்களின் விகிதம் ... | 56.2 | 57.0 | 50.4 | 59.0 | 62.6 | 60.5 | 70.5 | 63.9 | 62.6 | 72.7 | 71.6 | 71.0 | 72.9 | 68.9 |
| மொத்த வைப்புக்களுக்குத் திரவச் சொத்துக்களின் விகிதம் ... | 38.5 | 36.0 | 31.0 | 36.3 | 37.6 | 35.4 | 38.3 | 32.4 | 30.8 | 36.0 | 35.8 | 33.9 | 35.9 | 32.3 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீடுகளின் விகிதம் ... | 25.1 | 25.0 | 23.8 | 22.1 | 20.9 | 19.2 | 15.8 | 14.8 | 13.5 | 15.2 | 15.3 | 14.8 | 15.3 | 14.8 |
| மொத்த வைப்புக்களுக்குக் கடன்களினதும், மேலதிகப் பற்றுக்களினதும் விகிதம் ... ... | 39.4 | 39.6 | 45.6 | 44.9 | 43.2 | 51.7 | 57.0 | 66.6 | 71.4 | 60.6 | 60.3 | 64.1 | 60.3 | 65.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

† உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்களை உள்ளடக்கா.

* ரூ. 100/–, ரூ. 50/– இனத்தாள்களை நாணய மதிப்புநீக்கம் செய்ததன் விளைவால் 1970ஆம் ஆண்டின் இறுதி 3 மாதங்களிலும் வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் அமைப்பில் ஏற்பட்ட வேறுபாட்டினால், இவ்வடைப்புக்கோட்டிலுள்ள எண்தொகைகள், சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான எண்தொகைகளில் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளன.

** அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், தனியார் பிணைகளும், மத்திய வங்கி வெளியீடுகளும்.

மேலதிக திரவநிலையுடையதாய் விளங்கி மீளப்பார்வையிடும் காலப்பகுதியிலும் குறைந்த அளவிலென்றாலும் தொடர்ந்தும் இந்நிலையுடையதாய் விளங்கின வென்று கூறலாம். இது, மொத்த வைப்புக்களுக்கான கடன்களினதும், முற்பணங்களினதும், (கழிவொடு கொள்வனவு செய்யப்பட்ட உண்டியல்கள்) மாதாந்தச் சராசரி விகிதம், 1971இன் தொடர்பான காலப்பகுதியின் 66.7 சதவித விகிதத்திலும் பார்க்க மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் 70.1 சதவீதத்தில் அதிகமாகவிருப்பினும், 1969, 1970ஆம் ஆண்டு விகிதங்களாகிய முறையே 79.5, 85.5 சதவீதங்களிலும் பார்க்கக் குறிப்பிடத் தக்களவு குறைவுற்றிருந்ததிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; ஆயினும், மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் தனியார் துறையிலிருந்து வங்கிக் கொடுகடனுக்கான கேள்வியில் சிறு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதென்பது தெளிவு.

1962-72 காலப்பகுதிக்கான வர்த்தக வங்கிகளின் திரட்டப்பட்ட இருப்புச்சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும், தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்களின் புள்ளிவிபரங்கள் அட்டவணை 11 (ஈ) 7 இல் தரப்பட்டுள்ளன.

2. (இ) நிதிகளின் மூலங்களும் அவற்றின் பயன்பாடும்

1969-72 காலப்பகுதிக்கான வர்த்தக வங்கிப் பணங்களின் மாற்றங் களும், அவற்றின் பயன்பாடும் அட்டவணை 2 (ஈ) 8 இல் காட்டப்பட்டுள்ளன.

1971ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வர்த்தக வங்கிகளுடனான தனியார் துறைக் கொடுக்கல்வாங்கல்கள் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுகளும் உட்பட) முக்கியமாக அரசாங்கத் துறையின் பயன்படுத்தலுக்கு கணிசமானளவு நிதி வளங்களை உதவின. மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளிலிருந்து தனியார் துறைக்கு ரூ. 1,381 இலட்சம் கொண்ட தேறிய தொகை வழங்கப்பட்டு, அரசாங்கத் துறை, வர்த்தக வங்கி வளங்களுக்கு ரூ. 883 இலட்சம் கொண்ட தேறிய உதவுதொகை வழங் கியமையால் மீளப் பார்வையிடும் காலப்பகுதியில் இந்நிலை வேறுபட்டது. அரசாங்கத் துறையிலிருந்து வங்கிகளுக்கான பொருள்வளங்களின் சேர்க்கை முக்கியமாக வங்கிகளின் அரசாங்கப் பத்திர உடைமைகளின் ரூ. 554 இலட்சம் கொண்ட குறைப்பையும், வங்கிகளிலுள்ள அரசாங்க வைப்புக்களின் ரூ 393 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் உள்ளடக்குகின்றது.

தனியார் துறையில், கூட்டுறவுகள் வர்த்தக வங்கி வளங்களில் ரூ. 838 இலட்சம் கொண்ட தொகையைப் பயன்படுத்தின; இது, ஏறக்குறைய முற்றி லும் முற்பணங்களின் அதிகரிப்பால் ஏற்பட்டதாகும். மறுபுறம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் முக்கியமாக ரூ. 202 இலட்சம் கொண்ட தேறிய தொகையை வழங்கின. ஏனைய தனியார் துறைக் கொடுக்கல்வாங்கல்கள் இவற் றின் வைப்புக்களில் ரூ. 332 இலட்சம் கொண்ட வீழ்ச்சியையும், முற்பணங்களில் ரூ. 413 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் விளைவித்தன. ஆகவே, மொத்தமாக

# அட்டவணை II (ஈ) 8

## வங்கிகளினது வளங்களிற் வருடாந்த மாற்றங்களும், அவற்றின் பயன்பாடுகளும்
## 1969 — 1972

| | 1969 | 1970 | 1971 | 1970 திசெம்பர் தொடக்கம் 1972 ஓகத்து வரை | 1971 திசெம்பர் தொடக்கம் 1972 ஓகத்து வரை |
|---|---|---|---|---|---|
| **நிதிகளின் மூலங்கள்** | | | | | |
| **1. அரசாங்கத் துறை** ... | 83.0 | 215.5 | 3.5 | — | 95.0 |
| அரசாங்கப் பத்திர உடைமைகளின் குறைப்பு .. | 83.0 | — | — | — | 55.4 |
| வைப்புக்களின் அதிகரிப்பு . | — | 73.7 | — | — | 39.3 |
| இறக்குமதி உண்டியல்களின் வீழ்ச்சி ... | — | 141.8 | — | — | 0.3 |
| குறுந்தவணைக் கொடுகடனின் வீழ்ச்சி (1) .. | — | — | 3.5 | — | — |
| **2. மத்திய வங்கி** | 89.3 | 4.3 | 39.8 | 20.4 | 48.5 |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு ... | 84.3 | 4.3 | 24.5 | — | — |
| ஒதுக்குகளின் வீழ்ச்சி ... | 5.0 | — | 15.3 | 20.4 | 48.5 |
| **3. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்** | — | 44.7 | 27.8 | 20.6 | 26.1 |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | — | 44.7 | 27.8 | 20.6 | 26.1 |
| முற்பணங்களின் வீழ்ச்சி ... | — | — | — | — | — |
| **4. கூட்டுறவுகள்** .. | — | 19.0 | 21.8 | 30.6 | — |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | — | 19.0 | 18.4 | 11.4 | — |
| முற்பணங்களின் வீழ்ச்சி .. | — | — | 3.4 | 19.2 | — |
| **5. ஏனைய உள்நாட்டுத் தனியார் துறை** ... | 132.9 | 383.9 | 98.8 | 30.0 | — |
| வைப்புக்களின் அதிகரிப்பு .. | 132.9 | 341.9 | 98.8 | 30.0 | — |
| முற்பணங்களினதும், முதலீடுகளினதும் வீழ்ச்சி ... | — | 42.0 | — | — | — |
| **6. வங்கிகளுக்கிடையில் (2)** ... | 35.8 | 77.6 | 209.6 | 58.2 | 116.3 |
| மூலதனத்திலும், ஒதுக்குகளிலுமான அதிகரிப்பு ... | 14.5 | 17.8 | 24.6 | 23.9 | 7.0 |
| நிலையான இருப்புச் சொத்துக்களிலும், ஏனைய இருப்புச் சொத்துக்களிலுமான வீழ்ச்சி ... | 0.1 | — | — | 27.8 | 69.0 |
| 'ஏனைய' பொறுப்புக்களின் அதிகரிப்பு ... | 21.2 | 57.9 | 185.0 | 6.5 | — |
| வங்கிக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் (தேறிய) ... | — | 1.9 | — | — | 40.3 |
| கைப்பணத்தின் வீழ்ச்சி ... | — | — | — | — | — |
| **7. அந்நிய துறை** ... | 21.9 | 0.7 | 7.0 | — | 4.5 |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு .. | 3.0 | — | 7.0 | — | — |
| வைப்புக்களின் அதிகரிப்பு . | — | 0.7 | — | — | — |
| அந்நிய நிலுவைகளின் வீழ்ச்சி ... | 18.9 | — | — | — | 4.5 |
| **வளங்களின் மொத்த அதிகரிப்பு** | 362.9 | 745.7 | 408.3 | 159.8 | 290.4 |
| **நிதிகளின் பயன்பாடுகள்** | | | | | |
| **1. அரசாங்கத் துறை** ... | 100.4 | 335.6 | 75.1 | 47.4 | 6.7 |
| அரசாங்கப் பத்திர உடைமைகளின் அதிகரிப்பு .. | — | 335.0 | 50.4 | 25.6 | — |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | 4.3 | — | 22.3 | 10.9 | — |
| அரசாங்க இறக்குமதி உண்டியல்களின் அதிகரிப்பு ... | 87.9 | — | 2.4 | 0.7 | — |
| குறுந் தவணை கொடுகடனின் அதிகரிப்பு (1) ... | 8.2 | 0.6 | — | 10.2 | 6.7 |
| **2. மத்திய வங்கி** ... | — | 88.3 | — | 25.3 | 13.4 |
| கடன்பாடுகளின் வீழ்ச்சி ... | — | — | — | 25.3 | 13.4 |
| ஒதுக்குகளின் அதிகரிப்பு ... | — | 88.3 | — | — | — |
| **3. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்** | | | | | |
| வைப்புக்களின் வீழ்ச்சி .. | 85.4 | 43.1 | 62.3 | 31.3 | 5.9 |
| முற்பணங்களின் அதிகரிப்பு ... | 15.5 | — | — | — | — |
| **4. கூட்டுறவுகள்** ... | 69.9 | 43.1 | 62.3 | 31.3 | 5.9 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | 23.8 | 146.3 | — | — | 83.8 |
| முற்பணங்களின் அதிகரிப்பு ... | 3.9 | — | — | — | 0.6 |
| **5. ஏனைய உள்நாட்டுத் தனியார் துறை** .. | 19.9 | 146.3 | — | — | 83.2 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | 136.2 | — | 84.1 | 7.8 | 74.5 |
| முற்பணங்களினதும் முதலீடுகளினதும் அதிகரிப்பு ... | — | — | — | — | 33.2 |
| **6. வங்கிகளுக்கிடையில் (2)** ... | 136.2 | — | 84.1 | 7.8 | 41.3 |
| மூலதனத்திலும், ஒதுக்குகளிலுமான வீழ்ச்சி ... | 15.7 | 112.3 | 151.4 | 11.4 | 105.4 |
| நிலையான இருப்புச் சொத்துக்களிலும், ஏனைய | — | — | — | — | — |
| இருப்புச் சொத்துக்களிலுமான அதிகரிப்பு ... | — | 88.1 | 128.2 | -- | -- |
| 'ஏனைய' பொறுப்புக்களின் வீழ்ச்சி ... | — | — | — | -- | 90.1 |
| வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் (தேறிய) ... | 0.8 | — | 0.8 | 1 3 | -- |
| கைப்பணத்தின் அதிகரிப்பு .. | 14.9 | 24.2 | 22.4 | 10.1 | 15.3 |
| **7. அந்நிய துறை** ... | 1.0 | 20 1 | 35.1 | 36.5 | 0.4 |
| கடன்பாடுகளின் வீழ்ச்சி ... | — | 7.9 | — | 1.9 | 0.2 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | 1.0 | — | 0.4 | 0.8 | 0.2 |
| அந்நிய நிலுவைகளின் அதிகரிப்பு ... | — | 12.2 | 34.7 | 33.8 | -- |
| **பயன்படுத்தப்பட்ட நிதிவளங்களினது மொத்த அதிகரிப்பு** | 362.5 | 745.7 | 408.0 | 159.7 | 290.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(1) இவ்விடயம், அரசாங்கக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட காசோலைகள், காசுக் கட்டளைகள் ஆகியனவற்றைக் குறிக்கின்றது.

(2) இவ்விடயம், வர்த்தக வங்கித்தொழில் முறையில் கொடுக்கல்வாங்கல்களினால் ஏற்படும் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்களில் ஏற்பட்ட சகல மாற்றங்களையும் காட்டுகின்றது. சில கொடுக்கல்வாங்கல்களினால் வங்கிகளின் (ஏனைய) பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் தனியார் துறையிலுள்ளனவாயினும், இப்பல்வகைப்பட்ட விடயத்திலுள்ள மாற்றங்களைக் கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுகள், ஏனைய தனியார் துறை ஆகியவற்றின் கீழ் பாகுபடுத்தும் இடர்ப்பாட்டினால் காட்டப்பட்டுள்ளன.

தனியார் துறைக்கு வங்கிகளிலிருந்து ரூ 1,381 இலட்சம் கொண்ட தேறிய தொகை வழங்கப்பட்டது; இதற்கு மாறாக 1971 இன் தொடர்பான காலப் பகுதியில் வங்கிகளுக்குத் தனியார் துறையிலிருந்து ரூ. 422 இலட்சம் உதவப் பட்டது.

மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் வர்த்தக வங்கித்துறையில் சேர்க்கப் படும் வளங்கள் ரூ. 1,163 இலட்சமாகவிருக்கையில், இத்துறையினுள் பயன் படுத்தப்பட்ட தொகை ரூ. 1,054 இலட்சமாகும். 1971 இன் தொடர்பான காலப்பகுதியில் இத்துறையில் சேர்க்கப்பட்ட தொகை, பயன்படுத்தப்பட்ட தொகையிலும் பார்க்க ரூ. 468 இலட்சம் மிகைவுற்று விளங்கியது. மத்திய வங்கியானது, வர்த்தக வங்கி வளங்களுக்கு ரூ. 351 இலட்சம் கொண்ட தேறிய தொகையை வழங்கியது; இது வர்த்தக வங்கிகள் வசமுள்ள ஒதுக்கு களின் ரூ. 485 இலட்சம் கொண்ட வீழ்ச்சியிலும், வர்த்தக வங்கிக் கடன்பாடு களின் ரூ. 134 இலட்சம் கொண்ட வீழ்ச்சியிலும் காட்டப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் வர்த்தக வங்கிக் கடன் பாடுகளில் ரூ. 253 இலட்சம் கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டிருக்கையில், ஒதுக்கு களிலும் ரூ. 204 இலட்சம் கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டமையால் வர்த்தக வங்கிகளிலிருந்து மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 49 இலட்சமாக விளங்கியது. அந்நிய துறையிலிருந்து வங்கிகளுக்குச் சேர்க்கப்படும் வளங்கள், 1971 இன் தொடர்பான காலப்பகுதியில் ரூ. 365 இலட்சம் கொண்ட தேறிய தொகை அந்நிய துறைக்கு வழங்கப்பட்டதற்கு மாறாக இவ்வாண்டில் ரூ. 41 இலட்சமாக விளங்கியது.

## 2. (ஈ) தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன்

தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடனின் ரூ. 1275 இலட்சம் கொண்ட அதிகரிப்பில், ரூ. 831 இலட்சம் கொண்ட பெரும்பகுதி சேர்க்கை முறையி லுள்ள பண விடயங்களினால் ஏற்பட்டதாகும்; இது முக்கியமாக உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் நெல் விற்பனவு தொடர்பாகப் பெற்ற பொருள் வரவு களின் கொள்வனவைக் காட்டுகின்றது 1971 இன் தொடர்பான காலப்பகுதி யில் தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் ரூ 460 இலட்சத்தால் உயர் வுற்றிருக்கையில், சேர்க்கை முறையிலுள்ள பண விடயங்கள் ரூ. 487 இலட்சத் தால் குறைவுற்றன. ஆகவே, 1971 இன் முதல் எட்டு மாதங்களில் சேர்க்கை முறையிலுள்ள பண விடயங்கள் தவிர்த்து கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு, மீளப்பார்வையிடும் காலப்பகுதியின் ரூ 444 இலட்சம் கொண்ட அதிகரிப் புடன் ஒப்பிடுகையில் ரூ. 946 இலட்சமாக விளங்கியது. ஆயினும், மீளப்பார் வையிடும் காலப்பகுதியில் இத்தகைய கொடுகடனின் மாதாந்தச் சராசரி அளவு 1971 இன் தொடர்பான காலப்பகுதி அளவிலும் பார்க்க 10 சதவீதம் அதிக மாகவிருந்தது. ஆகவே, மீளப்பார்வையிடும் காலப்பகுதியில், தனியார் துறைக் கான வங்கிக் கொடுகடனில் சிறு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

## அட்டவணை II (ஈ) 9

### தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள்*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | இலங்கை வங்கிகள் | | | அந்நிய வங்கிகள் | | | சகல வங்கிகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1971 திசெம்பர் | 1972 திசெம்பர் | மாற்றம் | 1971 திசெம்பர் | 1972 திசெம்பர் | மாற்றம் | 1971 திசெம்பர் | 1972 திசெம்பர் | மாற்றம் |
| (அ) சேர்க்கை முறையிலுள்ள பண விடயங்கள்** .. | 106.8 | 190.7 | + 83.9 | 1.4 | 0.6 | — 0.8 | 108.2 | 191.3 | + 83.1 |
| (ஆ) உள்ளூர் உண்டியல்கள் .. | — | 0.3 | + 0.3 | — | 0.8 | + 0.8 | — | 1.1 | + 1.1 |
| (இ) இறக்குமதி உண்டியல்கள் ... | 25.0 | 26.0 | + 1.0 | 8.3 | 6.0 | — 2.3 | 33.3 | 32.0 | — 1.3 |
| (ஈ) ஏற்றுமதி உண்டியல்கள் ... | 37.3 | 36.9 | 0.4 | 78.3 | 75.3 | — 3.0 | 115.5 | 112.2 | — 3.3 |
| (உ) மேலதிகப்பற்றுக்கள் . | 431.9 | 437.3 | + 5.4 | 289.8 | 297.1 | + 7.3 | 721.7 | 734.4 | + 12.7 |
| (ஊ) கடன்கள் ... | 818.7 | 843.6 | + 24.9 | 72.7 | 83.1 | + 10.4 | 891.4 | 926.6 | + 35.2 |
| மொத்தம் .. | 1,419.8 | 1,534.8 | +115.0 | 450.4 | 462.8 | + 12.4 | 1,870.1 | 1,997.6 | +127.5 |

* அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும் உள்ளடக்கும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

** சேகரிப்புக்கென்று அனுப்பப்பட்ட காசோலைகள், காசுக் கட்டளைகள் ஆகியவற்றையும், உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கென்று நிதிஉதவி செய்வதற்காக கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட குறுந் தவணை முற்பணங்களையும் இப்பகுப்பு உள்ளடக்குகின்றது.

சேர்க்கை முறையிலுள்ள பண விடயங்கள் தவிர்த்து (இதன் முக்கிய உறுப்பு மாற்றங்கள் ஏற்கெனவே விவரிக்கப்பட்டுள்ளன) மீளப்பார்வையிடும் காலப் பகுதியில் வங்கிக் கடன்கள், மேலதிகப்பற்றுக்கள் உண்டியல்கள் ஆகிய முற் பணங்களின் அளவு பரந்த அளவில் ஏற்றவிறக்கத்திற்குட்பட்டது. சனவரியில் ஏற்பட்ட ரூ. 332 இலட்சம் கொண்ட அதிகரிப்பும், பெப்புருவரியில் ஏற்பட்ட ரூ 191 இலட்சம் கொண்ட வீழ்ச்சியும், மேயில் ஏற்பட்ட ரூ 411 இலட்சம் கொண்ட வீழ்ச்சியும், ஓகத்தில் ஏற்பட்ட ரூ. 373 இலட்சம் கொண்ட அதி கரிப்பும் குறிப்பிடத்தக்க மாற்றங்களாகும் இறக்குமதி, ஏற்றுமதி உண்டியல் உடைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களே முற்பணங்களில் ஏற்பட்ட குறிப்பிடத் தக்க மாற்றங்களுக்குக் காரணமாகும். வங்கிகள் வசமுள்ள இறக்குமதி, ஏற்று மதி உண்டியல்கள் சனவரியில் முறையே ரூ. 305 இலட்சமாகவும், ரூ. 73 இலட்சமாகவும் உயர்வுற்று பெப்புருவரியில் ரூ. 335 இலட்சமாகவும், ரூ. 77 இலட்சமாகவும் வீழ்ச்சியுற்றன. மே மாதத்தில் கடன்களும், முற்பணங்களும் ரூ. 411 இலட்சத்தால் குறைவுற்றிருக்கையில், இறக்குமதி உண்டியல்களும், ஏற்றுமதி உண்டியல்களும் முறையே ரூ. 139 இலட்சத்தாலும், ரூ. 240 இலட்சத் தாலும் வீழ்ச்சியுற்றன. ஓகத்து மாதத்தில் கடன்களிலும் முற்பணங்களிலும் ஏற்பட்ட ரூ 373 இலட்சம் கொண்ட அதிகரிப்பிற்கு ஏற்றுமதி உண்டியல்களின் ரூ. 159 இலட்சம் கொண்ட அதிகரிப்புக் காரணமாகவிருக்கையில், இறக்குமதி உண்டியல்கள் ரூ 33 இலட்சத்தால் குறைவுற்றன. ஆயினும், மீளப்பார்வை யிடும் காலப்பகுதியை நோக்கும்போது, இறக்குமதி உண்டியல்களும், ஏற்றுமதி உண்டியல்களும் முறையே ரூ. 13 இலட்சத்தாலும், ரூ. 33 இலட்சத்தாலும் குறைவுற்றன. 1971 இன் தொடர்பான காலப்பகுதியில், ஏற்றுமதி உண்டியல்கள் ரூ. 272 இலட்சத்தால் உயர்வுற்றிருக்கையில், இறக்குமதி உண்டியல்கள் ரூ. 21 இலட்சத்தால் குறைவுற்றன, கடன்களிலும், மேலதிகப்பற்றுக்களிலும் ஒருமித்து ஏற்பட்ட மாதாந்த மாற்றங்கள் மிகக் குறிப்பிடத்தக்கனவல்ல. இவை, 1971 காலப்பகுதியின் ரூ. 695 இலட்சம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் ரூ. 484 இலட்சத்தால் உயர்வுற்றன,

வர்த்தக வங்கி முற்பணங்களைத் தேவைகளின்படியும் மீள்தற்காலங்களின் படியும், பாகுபடுத்தி அட்டவணை II (ஈ) 10 தருகின்றது. உடைமையாளர்களின் படி வங்கி வைப்புக்கள் பாகுபடுத்தப்பட்டன போன்று முற்பணங்களின் பகுப்புப் பற்றிய தரவுகளும் 1972 இன் முதலிரு காலாண்டுகளுக்கு மட்டுமே கிடைக்கத் தக்கதாகவுள்ளன. இவ்வட்டவணையில் 'முற்பணங்கள்' என்று உபயோகிக்கப் படும் பதம் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுகளும் உட்பட) தனியார் துறைக்கான கொடுகடனை உள்ளடக்குகின்றது. இம்முற்பணங்கள் சேர்க்கை முறையிலுள்ள பண விடயங்கள் தவிர்த்து கடன்கள், மேலதிகப் பற்றுக்கள், கழிவொடு கொள்வனவுசெய்யப்பட்ட உண்டியல்கள் ஆகும்.

## அட்டவணை II (ஈ) 10

### தேவைகளின்படியும், மீள்தற்காலங்களின்படியும் பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | குறுகியகால | | நடுத்தரகால | | நீண்டகால | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) (7)ன் சத வீதமாக 1 | (3) | (4) (7)ன்சத வீதமாக 3 | (5) | (6) (7)ன் சத வீதமாக 5 | (7) | (8) மொத் தத்தின் சத வீதமாக (7) |
| **அ. வர்த்தகம்** | | | | | | | | |
| 1970 திசெம்பர் ... | 502.4 | 78.0 | 104.6 | 16.2 | 36.8 | 5.7 | 643.9 | 41.7 |
| 1971 மாச்சு ... | 512.8 | 78.5 | 104.6 | 16.0 | 36.1 | 5.5 | 653.4 | 41.2 |
| 1971 யூன் ... | 533.7 | 77.5 | 120.9 | 17.6 | 34.1 | 4.9 | 688.7 | 42.6 |
| 1971 செத்தெம்பர் ... | 572.7 | 79.0 | 119.2 | 16.4 | 33.3 | 4.6 | 725.3 | 43.5 |
| 1971 திசெம்பர் ... | 596.8 | 79.1 | 125.8 | 16.7 | 31.5 | 4.2 | 754.1 | 42.8 |
| 1972 மாச்க ... | 579.3 | 79.0 | 124.2 | 16.9 | 30.0 | 4.1 | 733.4 | 41.1 |
| 1972 யூன் ... | 564.3 | 78.8 | 123.3 | 17.2 | 28.2 | 3.9 | 715.9 | 40.5 |
| **ஆ. நிதி** | | | | | | | | |
| 1970 திசெம்பர் ... | 74.8 | 54.5 | 33.3 | 24.2 | 29.2 | 21.3 | 137.3 | 8.9 |
| 1971 மாச்சு ... | 70.0 | 53.4 | 32.9 | 25.1 | 28.2 | 21.5 | 131.1 | 8.3 |
| 1971 யூன் ... | 73.0 | 55.1 | 32.7 | 24.7 | 26.7 | 20.2 | 132.4 | 8.2 |
| 1971 செத்தெம்டர் ... | 72.1 | 55.0 | 30.7 | 23.4 | 28.3 | 21.6 | 131.1 | 7.9 |
| 1971 திசெம்பர் ... | 67.2 | 54.1 | 30.2 | 24.3 | 26.8 | 21.6 | 124.1 | 7.0 |
| 1972 மாச்சு ... | 66.7 | 54.0 | 30.4 | 24.6 | 26.4 | 21.4 | 123.5 | 6.9 |
| 1972 யூன் ... | 69.0 | 56.3 | 30.0 | 24.5 | 23.5 | 19.2 | 122.6 | 6.9 |
| **இ. விவசாயம்** | | | | | | | | |
| 1970 திசெம்பர் ... | 91.8 | 45.2 | 85.6 | 42.2 | 25.6 | 12.6 | 203.0 | 13.1 |
| 1971 மாச்சு ... | 99.4 | 47.5 | 84.4 | 40.4 | 25.2 | 12.0 | 209.1 | 13.2 |
| 1971 யூன் ... | 101.4 | 50.5 | 78.2 | 39.0 | 21.0 | 10.5 | 200.7 | 12.4 |
| 1971 செத்தெம்பர் ... | 104.0 | 52.3 | 74.8 | 37.6 | 20.0 | 10.1 | 198.8 | 11.9 |
| 1971 திசெம்பர் ... | 125.8 | 55.5 | 82.6 | 36.4 | 18.3 | 8.1 | 226.7 | 12.9 |
| 1972 யாச்சு ... | 139.9 | 59.7 | 77.6 | 33.1 | 16.9 | 7.2 | 234.4 | 13.1 |
| 1972 யூன் ... | 138.8 | 59.8 | 77.9 | 33.5 | 15.5 | 6.7 | 232.2 | 13.1 |
| **ஈ. கைத்தொழில்** | | | | | | | | |
| 1971 திசெம்பர் ... | 197.0 | 47.3 | 151.5 | 36.4 | 67.4 | 16.2 | 416.0 | 26.9 |
| 1971 மாச்சு ... | 200.7 | 47.1 | 162.0 | 38.0 | 63.1 | 14.8 | 425.8 | 26.8 |
| 1971 யூன் ... | 211.5 | 49.1 | 158.1 | 36.7 | 60.7 | 14.1 | 430.3 | 26.6 |
| 1971 செத்தெம்பர் ... | 195.5 | 46.0 | 167.9 | 39.5 | 61.7 | 14.5 | 425.0 | 25.5 |
| 1971 திசெம்பர் ... | 225.5 | 49.3 | 170.9 | 37.4 | 60.8 | 13.3 | 457.1 | 25.9 |
| 1972 மாச்சு ... | 247.3 | 51.7 | 172.4 | 36.1 | 58.5 | 12.2 | 478.2 | 26.8 |
| 1972 யூன் ... | 256.4 | 53.1 | 168.9 | 35.0 | 57.2 | 11.8 | 482.6 | 27.3 |
| **உ. நுகர்வு** | | | | | | | | |
| 1970 திசெம்பர் ... | 22.1 | 22.3 | 50.9 | 51.4 | 26.1 | 26.3 | 99.1 | 6.4 |
| 1971 மாச்சு ... | 24.8 | 22.4 | 57.9 | 52.3 | 27.8 | 25.1 | 110.6 | 7.0 |
| 1971 யூன் ... | 25.6 | 22.6 | 62.2 | 54.9 | 25.4 | 22.4 | 113.2 | 7.0 |
| 1971 செத்தெம்பர் ... | 30.1 | 25.1 | 66.4 | 55.3 | 23.6 | 19.6 | 120.1 | 7.2 |
| 1971 திசெம்பர் ... | 35.1 | 26.3 | 72.7 | 54.5 | 25.7 | 19.2 | 133.5 | 7.6 |
| 1972 மாச்சு ... | 40.2 | 28.2 | 75.4 | 52.8 | 27.0 | 18.9 | 142.7 | 8.0 |
| 1972 யூன் ... | 39.9 | 27.8 | 75.7 | 52.7 | 28.1 | 19.5 | 143.7 | 8.1 |
| **ஊ. ஏனைய கடன்கள்** | | | | | | | | |
| 1970 திசெம்பர் ... | 21.4 | 47.7 | 18.2 | 40.5 | 5.3 | 11.8 | 44.9 | 2.9 |
| 1971 மாச்சு ... | 25.3 | 44.9 | 23.7 | 42.0 | 7.4 | 13.1 | 56.4 | 3.5 |
| 1971 யூன் ... | 22.2 | 43.1 | 24.5 | 47.6 | 4.9 | 9.5 | 51.5 | 3.2 |
| 1971 செத்தெம்பர் ... | 37.3 | 54.7 | 25.5 | 37.4 | 5.3 | 7.8 | 68.2 | 4.1 |
| 1971 திசெம்பர் ... | 28.3 | 41.9 | 34.0 | 50.4 | 5.2 | 7.7 | 67.5 | 3.8 |
| 1972 மாச்சு ... | 26.3 | 36.9 | 39.5 | 55.4 | 5.5 | 7.7 | 71.3 | 4.0 |
| 1972 யூன் ... | 26.8 | 38.4 | 37.7 | 54.0 | 5.4 | 7.7 | 69.8 | 3.9 |
| **எ. மொத்தம்** | | | | | | | | |
| 1970 திசெம்பர் ... | 909.6 | 58.9 | 444.0 | 28.7 | 190.5 | 12.3 | 1,544.1 | 100.0 |
| 1971 மாச்சு ... | 933.2 | 58.8 | 465.5 | 29.3 | 187.8 | 11.8 | 1,586.5 | 100.0 |
| 1971 யூன் ... | 967.4 | 59.8 | 476.7 | 29.5 | 172.7 | 10.7 | 1,616.8 | 100.0 |
| 1971 செத்தெம்பர் ... | 1,011.7 | 60.6 | 484.6 | 29.0 | 172.3 | 10.3 | 1,668.5 | 100.0 |
| 1971 திசெம்பர் ... | 1,078.7 | 61.2 | 516.2 | 29.3 | 168.3 | 9.5 | 1,763.1 | 100.0 |
| 1972 மாச்சு ... | 1,099.8 | 61.7 | 519.5 | 29.1 | 164.2 | 9.2 | 1,783.5 | 100.0 |
| 1972 யூன் ... | 1,095.2 | 62.0 | 513.6 | 29.1 | 158.0 | 8.9 | 1,766.9 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

* முற்பணங்களாவன கடன்கள், மேலதிகப்பற்றுக்கள், கழிவுபட்ட உண்டியல்கள் ஆகியனவற்றை (சேகரிப்பு நிலையிலுள்ள பணவிடயங்களை நீக்கி) உட்படுத்தும்.

1972 இன் முதல் அரைப்பகுதியில் வங்கி முற்பணங்களின் அமைப்பில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் வர்த்தக நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களின் ரூ. 382 இலட்சம்கொண்ட வீழ்ச்சியும், கைத்தொழில் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களின் ரூ. 255 இலட்சம்கொண்ட அதிகரிப்புமாகும். வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்கள் 1971 திசெம்பர் இறுதியில் 42.8 சதவீதமாக அமைந்து 1972 யூன் இறுதியில் 40.5 சதவீதமாகக் குறைவுற்றன. 1971 இன் தொடர்பான காலப்பகுதியில் இம்முற்பணங்கள் 41.7 சதவீதத்திலிருந்து 42.6 சதவீதமாக உயர்வுற்றன கைத்தொழில் முற்பணங்கள், மொத்த முற்பணங்களில் 26.9 சதவீதத்திலிருந்து 1971 இன் முதலரைப் பகுதியில் 26.6 சதவீதமாகக் குறைவுற்று 1972 இன் முதலரைப் பகுதியில் 25.9 சதவீதத்திலிருந்து 27.3 சவீதமாக உயர்வுற்றன.

கைத்தொழில் முற்பணங்களின் அதிகரிப்பில், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ரூ. 44 இலட்சத்தைப் பயன்படுத்தி ஏனைய தனியார் துறைக்கு ரூ. 211 இலட்சத்தை விட்டுக்கொடுத்தன. கைத்தொழில்படியாக, கைத்தொழில் துறை முற்பணங்களில் ஏற்பட்ட முழு அதிகரிப்பும் ஆடைக் கைத்தொழில்களில் காணப்பட்டது. ஆடைக் கைத்தொழில் தொகுதியின் ரூ. 280 இலட்சம் கொண்ட அதிகரிப்பில், ரூ. 245 இலட்சம் கொண்ட தொகையை அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உள்ளடக்கின. தேயிலே, றப்பர், தெங்குப்பொருள் ஆகியவற்றைப் பதனிடுவதற்கான முற்பணங்கள் ரூ. 75 இலட்சத்தால் உயர்வுற்றிருக்கையில், 'ஏனைய கைத்தொழில்' தொகுதிக்கான முற்பணங்கள் ரூ 78 இலட்சத்தால் குறைவுற்றன, 'ஏனைய கைத்தொழில்' தொகுதியில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான முற்பணங்கள் ரூ. 149 இலட்சத்தால் குறைவுற்றிருக்கையில், ஏனைய தனியார் துறைக்கான முற்பணங்கள் ரூ. 71 இலட்சத்தால் உயர்வுற்றன. ஏனைய பகுப்பு கைத்தொழில் கடன் பெறுநருக்கான முற்பணங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் குறிப்பிடத்தக்கனவல்ல. கைத்தொழில் நோக்கங்களுக்கான முற்பணங்களின் விவரமான பகுப்பாய்வு அட்டவணை II (ஈ) 11 இல் தரப்பட்டுள்ளது.

1972 இன் முதலரைப் பகுதி வங்கி முற்பணங்களின் அமைப்பில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு பண்பு நுகர்வு, 'ஏனைய கடன்கள்' ஆகியவற்றின் அளவைக் குறைத்தமையாகும். இவ்விரு கடன்களும் சேர்ந்து 1971 இன் முதலரைப் பகுதியில் ரூ. 207 இலட்சத்தால் துரிதமாக உயர்வுற்று, மொத்தமாக இவ்வாண்டில் ரூ. 570 இலட்சத்தால் உயர்வுற்றன. 1972 இன் முதற் காலாண்டில் இவை ரூ. 130 இலட்சத்தால் உயர்வுற்றன. சென்ற ஆண்டறிக்கையில் காட்டப்பட்டவாறு, பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளிலிருந்து குறைந்தளவு கொடுகடன் கேள்வி ஏற்பட்டதனுல் வங்கிகள், தமது நுகர்வையும் 'ஏனைய' கடன்களை

அட்டவணை II (ஈ) 11

## கைத்தொழில் தேவைகளுக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள்
## (காலப்பகுதி முடிவில் வெளிநிற்கும் தொகை)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1970 திசெம்பர் | 1971 மாச்சு | 1971 யூன் | 1971 செத்தெம்பர் | 1971 திசெம்பர் | 1972 மாச்சு | 1972 யூன் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. ஆடைகள் | 86.8 | 81.2 | 89.7 | 71.3 | 66.1 | 87.0 | 94.1 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 21.2 | 15.5 | 24.7 | 8.5 | 4.1 | 22.2 | 28.6 |
| ஏனையவை | 65.6 | 65.7 | 65.0 | 62.9 | 62.0 | 64.8 | 65.5 |
| 2. உலோகப் பொருட்கள் | 42.5 | 48.1 | 38.9 | 40.9 | 37.3 | 37.0 | 38.1 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 14.7 | 17.7 | 14.5 | 14.6 | 15.2 | 14.2 | 14.5 |
| ஏனையவை | 27.8 | 30.4 | 24.4 | 26.3 | 22.1 | 22.8 | 23.6 |
| 3. இரசாயனப் பொருட்கள் | 58.0 | 54.3 | 54.6 | 56.7 | 59.0 | 54.2 | 57.0 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 38.6 | 38.0 | 37.8 | 36.8 | 36.2 | 33.1 | 34.0 |
| ஏனையவை | 19.4 | 16.3 | 16.8 | 19.9 | 22.8 | 21.1 | 22.9 |
| 4. காலணிகளும், தோற்பொருட்களும் | 6.6 | 6.7 | 7.7 | 9.2 | 8.0 | 10.6 | 8.9 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 4.7 | 5.1 | 5.5 | 5.8 | 5.7 | 5.7 | 5.8 |
| ஏனையவை | 1.9 | 1.7 | 2.1 | 3.5 | 2.3 | 4.9 | 3.1 |
| 5. விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும் | 6.7 | 7.1 | 4.9 | 4.0 | 4.3 | 3.2 | 2.5 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | — | — | — | — | — | — | — |
| ஏனையவை | 6.7 | 7.1 | 4.8 | 4.0 | 4.3 | 3.2 | 2.5 |
| 6. தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் ஆகியவற்றைப் பதனிடுதல் | 29.0 | 31.9 | 33.8 | 37.4 | 35.8 | 40.5 | 43.3 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | — | — | — | — | — | — | — |
| ஏனையவை | 29.0 | 31.9 | 33.8 | 37.4 | 35.8 | 40.5 | 43.3 |
| 7. பொறியியலும், கட்டிட ஆக்கமும் | 50.9 | 61.6 | 60.5 | 60.1 | 63.4 | 65.2 | 63.1 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 12.1 | 22.9 | 23.3 | 23.6 | 23.8 | 21.1 | 21.4 |
| ஏனையவை | 38.8 | 38.7 | 37.2 | 36.5 | 39.6 | 44.1 | 41.7 |
| 8. ஏனைய கைத்தொழில்கள் | 135.5 | 134.7 | 140.1 | 145.3 | 183.3 | 180.3 | 175.5 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 68.8 | 56.5 | 61.0 | 78.2 | 109.1 | 99.9 | 94.2 |
| ஏனையவை | 66.7 | 78.2 | 79.1 | 67.0 | 74.2 | 80.4 | 81.3 |
| மொத்தம் | 416.0 | 425.8 | 430.3 | 425.0 | 457 1 | 478.2 | 482.6 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 160.1 | 155.7 | 166.9 | 167.6 | 194.2 | 196.4 | 198.6 |
| ஏனையவை | 255.9 | 270.1 | 263.4 | 257.5 | 262.9 | 281.8 | 284.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

யும் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. 1972, ஏப்பிறலில் அத்தியாவசியமற்ற தேவைகளுக்கான கடன்களையும், முற்பணங்களையும் 1972 மாச்சு இறுதியிலுள்ள முற்பணங்களின் அளவில் வைத்திருக்குமாறு வர்த்தக வங்கிகளை மத்திய வங்கி வேண்டியது. இதன் விளைவாக, வர்த்தக வங்கிகளின் நுகர்வும், 'ஏனைய' கடன்களும் இணைந்து 1972 இன் இரண்டாம் காலாண்டில் ரூ. 5 இலட்சத்தால் குறைவுற்றன.

## அட்டவணை II (ஈ) 12

### வட்டி வீதங்களின்படியான முற்பணங்கள்*

| வட்டி வீதம் (சத வீதமாக) | 1970 திசெம்பர் 31 தொகை ப.இ.ரூ. | 1970 திசெம்பர் 31 மொத்தத்தின் சத வீதமாக | 1971 மாச்சு 31 தொகை ப.இ.ரூ. | 1971 மாச்சு 31 மொத்தத்தின் சத வீதமாக | 1971 யூன் 30 தொகை ப.இ.ரூ. | 1971 யூன் 30 மொத்தத்தின் சத வீதமாக | 1971 செத்தெம்பர் 30 தொகை ப.இ.ரூ. | 1971 செத்தெம்பர் 30 மொத்தத்தின் சத வீதமாக | 1971 திசெம்பர் 31 தொகை ப.இ.ரூ. | 1971 திசெம்பர் 31 மொத்தத்தின் சத வீதமாக | 1972 மாச்சு 31 தொகை ப.இ.ரூ. | 1972 மாச்சு 31 மொத்தத்தின் சத வீதமாக | 1972 யூன் 30 தொகை ப.இ.ரூ. | 1972 யூன் 30 மொத்தத்தின் சத வீதமாக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3½ க்குக் கீழ் ... | 2.8 | 0.2 | 7.5 | 0.5 | 8.1 | 0.5 | 5.0 | 0.3 | 4.2 | 0.3 | 5.3 | 0.3 | 6.1 | 0.4 |
| 3½ ... | 3.8 | 0.3 | 4.6 | 0.3 | 4.6 | 0.3 | 2.8 | 0.2 | 1.8 | 0.1 | 2.0 | 0.1 | 2.1 | 0.1 |
| 4 ... | 3.1 | 0.2 | 0.9 | 0.1 | 1.1 | 0.1 | 1.3 | 0.1 | 1.6 | 0.1 | 1.8 | 0.1 | 2.0 | 0.1 |
| 4½ ... | 2.0 | 0.1 | 2.1 | 0.1 | 2.1 | 0.1 | 1.9 | 0.1 | 2.2 | 0.1 | 2.0 | 0.1 | 2.0 | 0.1 |
| 5 ... | 26.8 | 1.9 | 36.0 | 2.4 | 36.5 | 2.4 | 30.6 | 2.0 | 42.6 | 2.6 | 47.8 | 2.9 | 45.7 | 2.7 |
| 5½ ... | 3.1 | 0.2 | 4.0 | 0.3 | 4.2 | 0.3 | 2.6 | 0.2 | 2.4 | 0.1 | 9.7 | 0.6 | 3.0 | 0.2 |
| 6 ... | 51.0 | 3.5 | 45.8 | 3.1 | 34.7 | 2.3 | 30.0 | 1.9 | 30.9 | 1.9 | 28.2 | 1.7 | 27.8 | 1.7 |
| 6½ ... | 46.4 | 3.2 | 41.6 | 2.8 | 45.5 | 3.0 | 39.8 | 2.6 | 36.8 | 2.2 | 28.9 | 1.7 | 29.9 | 1.8 |
| 7 ... | 231.2 | 16.1 | 282.1 | 17.2 | 260.0 | 17.1 | 274.2 | 17.7 | 275.4 | 16.7 | 274.3 | 16.6 | 265.5 | 16.0 |
| 7½ ... | 140.4 | 9.8 | 116.2 | 7.8 | 146.1 | 9.6 | 135.8 | 8.8 | 148.2 | 9.0 | 126.5 | 7.6 | 143.4 | 8.6 |
| 8 ... | 166.9 | 11.6 | 181.2 | 12.2 | 162.2 | 10.7 | 181.6 | 11.7 | 187.3 | 11.4 | 196.3 | 11.8 | 192.6 | 11.6 |
| 8½ ... | 254.7 | 17.7 | 246.5 | 16.6 | 262.4 | 17.3 | 269.5 | 17.4 | 279.8 | 17.0 | 280.9 | 17.0 | 282.1 | 17.0 |
| 9 ... | 274.9 | 19.1 | 282.1 | 19.0 | 277.2 | 18.2 | 263.8 | 17.0 | 316.7 | 19.2 | 298.6 | 18.0 | 274.1 | 16.5 |
| 9½ ... | 52.0 | 3.6 | 67.2 | 4.5 | 77.1 | 5.1 | 93.9 | 6.1 | 91.8 | 5.6 | 87.7 | 5.3 | 113.8 | 6.8 |
| 10 ... | 85.6 | 5.9 | 93.9 | 6.3 | 101.1 | 6.6 | 102.0 | 6.6 | 99.8 | 6.1 | 120.3 | 7.3 | 126.8 | 7.6 |
| 10½ ... | 7.8 | 0.5 | 9.2 | 0.6 | 8.6 | 0.6 | 12.4 | 0.8 | 12.9 | 0.8 | 11.9 | 0.7 | 10.0 | 0.6 |
| 11 ... | 37.1 | 2.6 | 35.4 | 2.4 | 35.9 | 2.4 | 37.1 | 2.4 | 36.0 | 2.2 | 36.2 | 2.2 | 36.3 | 2.2 |
| 11½ ... | 6.5 | 0.5 | 0.5 | .. | 0.4 | ... | 0.6 | ... | 0.9 | ... | 1.1 | 0.1 | 1.8 | 0.1 |
| 12 ... | 42.7 | 3.0 | 52.6 | 3.5 | 52.4 | 3.4 | 62.4 | 4.0 | 76.6 | 4.6 | 96.4 | 5.8 | 97.7 | 5.9 |
| மொத்தம் ... | 1,438.9 | 100.0 | 1,482.1 | 100.0 | 1,520.2 | 100.0 | 1,547·5 | 100.0 | 1,647.9 | 100.0 | 1,056.0 | 100.0 | 1,662.7 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

* நடைமுடைச் செலாவணி வீதங்களில் கொள்வனவுசெய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களேயும் சேகரிப்பு நிலேயிலுள்ள பணவிடயங்களேயும் நீக்கி.

## அட்டவணை II (ச) 13

### அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்*

| | 1970 திசெம்பர் 31 | | 1971 மாச்சு 31 | | 1971 யூன் 30 | | 1971 செத்தெம்பர் 30 | | 1971 திசெம்பர் 31 | | 1972 மாச்சு 31 | | 1972 யூன் 30 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக |
| ஆவண உண்டியல்கள் ... ... | 136.1 | 8.8 | 132.2 | 8.3 | 142.3 | 8.8 | 163.3 | 9.8 | 147.1 | 8.3 | 163.0 | 9.1 | 143.2 | 8.1 |
| அரசாங்கப் பிணைகள் .. ... | 22.9 | 1.5 | 21.1 | 1.3 | 22.7 | 1.4 | 24.0 | 1.4 | 28.8 | 1.6 | 28.7 | 1.6 | 30.9 | 1.7 |
| கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பங்குமுதல். | 24.5 | 1.6 | 24.0 | 1.5 | 24.4 | 1.5 | 27.8 | 1.7 | 22.8 | 1.3 | 21.8 | 1.2 | 21.3 | 1.2 |
| ஆயுட் காப்புறுதிகளின் பணப்பெறுமானங்கள் உட்பட தவணை சேமிப்பு வைப்புக்களும், ஏனைய பண வைப்புக்களும் ... | 50.1 | 3.2 | 49.9 | 3.1 | 51.3 | 3.2 | 51.3 | 3.1 | 52.8 | 3.0 | 55.2 | 3.1 | 60.6 | 3.4 |
| வியாபாரக் கையிருப்பு ... ... | 289.0 | 18.7 | 301.2 | 19.0 | 307.7 | 19.0 | 351.8 | 21.1 | 361.9 | 20.5 | 354.4 | 19.9 | 339.1 | 19.2 |
| அசைவற்ற சொத்து ... ... | 196.1 | 12.7 | 187.6 | 11.8 | 198.2 | 12.3 | 190.3 | 11.4 | 201.1 | 11.4 | 206.0 | 11.5 | 219.1 | 12.4 |
| உத்தரவாதங்கள்... ... ... | 293.9 | 19.0 | 320.2 | 20.2 | 335.1 | 20.7 | 338.9 | 20.3 | 356.5 | 20.2 | 344.6 | 19.3 | 358.9 | 20.3 |
| நம்பிக்கைப் பற்றுச் சீட்டுகள்... ... | 118.6 | 7.7 | 112.4 | 7.1 | 108.3 | 6.7 | 93.0 | 5.6 | 106.3 | 6.0 | 108.8 | 6.1 | 115.7 | 6.5 |
| தவணைக் கொள்வனவு உடன்படிக்கைகள்... | 22.3 | 1.4 | 20.9 | 1.3 | 18.3 | 1.1 | 17.1 | 1.0 | 14.5 | 0.8 | 14.8 | 0.8 | 15.3 | 0.9 |
| பொறித் தொகுதியும், இயந்திர வகையும்... | 9.0 | 0.6 | 9.9 | 0.6 | 9.2 | 0.6 | 9.8 | 0.6 | 11.6 | 0.7 | 14.3 | 0.8 | 14.8 | 0.8 |
| இழுபொறிகளும், மோட்டார் வாகனங்களும். | 59.7 | 3.9 | 61.4 | 3.9 | 61.0 | 3.8 | 59.4 | 3.6 | 67.6 | 3.8 | 59.2 | 3.3 | 59.6 | 3.4 |
| வாக்குறுதிப் பத்திரங்கள், முறிகள், சலுகை விடுப்புச் சான்றிதழ்கள் ஆகியன ... | 206.1 | 13.3 | 230.5 | 14.5 | 221.7 | 13.7 | 230.3 | 13.8 | 278.0 | 15.8 | 282.5 | 15.8 | 260.5 | 14.7 |
| ஏனையவை ... ... .. | 52.2 | 3.4 | 58.2 | 3.7 | 48.3 | 3.0 | 65.3 | 3.9 | 70.8 | 4.0 | 85.7 | 4.8 | 86.8 | 4.9 |
| பிணையற்றவை ... . ... | 63.5 | 4.1 | 57.0 | 3.6 | 68.3 | 4.2 | 46.0 | 2.8 | 43.4 | 2.5 | 44.4 | 2.5 | 40.9 | 2.3 |
| மொத்தம் | 1544.1 | 100.0 | 1586.5 | 100.0 | 1616.8 | 100.0 | 1668.5 | 100.0 | 1763.1 | 100.0 | 1783.5 | 100.0 | 1766.9 | 100.0 |

* சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வட்டி வீதங்களின்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள் அட்டவணை II (ஈ) 12 இல் காட்டப்பட்டுள்ளன. முற்பணங்களின் மிகக் கூடிய பங்கு 1971 இறுதியின் 9 சதவீதத்திற்கு மாறாக 8½ சதவீதத்தில் அமைந்திருந்தது. ஆயினும் 7-9 சதவீதத்திலான முற்பணங்கள் 73.3 சதவீதத்திலிருந்து 69.7 சதவீதமாகக் குறைவுற்றிருக்கையில், 9 சதவீதத்திற்குமேற்பட்ட முற்பணங்கள் 19.3 சதவீதத்திலிருந்து 23.2 சதவீதமாக உயர்வுற்றன. ஆகவே, கூடிய வீதங்களில் வழங்கப்படும் வங்கிக் கடன்களின் பங்கில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பிணை வகையாகப் பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள் அட்டவணை II (ஈ) 13 இல் காட்டப்பட்டுள்ளன.

## 2, (உ) கிளையமைப்பு

*1963-72* காலப்பகுதியில், இலங்கையர் வங்கிகளுக்கும் வெளிநாட்டு வங்கிகளுக்கும் இடையில் உள்ள வங்கி அலுவலகங்களினதும், வைப்புக்களினதும் பகுப்பாய்வு அட்டவணை II (ஈ) 14 இல் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை II (ஈ) 14

### வங்கி அலுவலகங்களினதும்,[1] வைப்புக்களினதும் பங்கீடு 1963—72

| ஆண்டு | மொத்தம் | | | இலங்கை வங்கிகள் | | | பிரித்தானிய வங்கிகள் | | | இந்திய, பாகிஸ்தானிய வங்கிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | |
| | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % |
| 1963 | 83 | 1,301 | 100 | 67 | 801 | 61 | 12 | 412 | 32 | 4 | 88 | 7 |
| 1964 | 88 | 1,447 | 100 | 72 | 943 | 65 | 12 | 415 | 29 | 4 | 90 | 6 |
| 1965 | 97 | 1,546 | 100 | 81 | 1,023 | 66 | 12 | 431 | 28 | 4 | 92 | 6 |
| 1966 | 105 | 1,502 | 100 | 89 | 1,003 | 67 | 12 | 419 | 28 | 4 | 80 | 5 |
| 1967 | 133 | 1,637 | 100 | 117 | 1,157 | 71 | 12 | 404 | 25 | 4 | 76 | 5 |
| 1968 | 141 | 1,808 | 100 | 125 | 1,329 | 73 | 12 | 409 | 23 | 4 | 71 | 4 |
| 1969 | 155 | 1,917 | 100 | 140 | 1,405 | 73 | 11 | 437 | 23 | 4 | 74 | 4 |
| 1970 | 165 | 2,394 | 100 | 152 | 1,831 | 76 | 9 | 472 | 20 | 4 | 91 | 4 |
| 1971 | 189 | 2,516 | 100 | 176 | 1,951 | 77 | 9 | 471 | 19 | 4 | 94 | 4 |
| 1972[2] | 204 | 2,551 | 100 | 191 | 2,020 | 79 | 9 | 441 | 17 | 4 | 90 | 4 |

குறிப்பு: 1969 ஆம் 1970 ஆம் ஆண்டுகளில் பிரித்தானிய வங்கிகளின் எண்ணிக்கைக் குறைவிற்குப் பின்வருவன காரணமாயிருக்கலாம்.

1. 1969 ஆம் ஆண்டில் ஈஸ்ரேண் வங்கி லிமிடெட்டை இலங்கை வங்கியாக மாற்றியமை.
2. 1970 இல் கற்றன் தேசிய வங்கியை அமைப்பதற்காக கீற்றன் வங்கியையும், நஷனல் அண்ட் கிறின்ட்லேய்ஸ் வங்கியின் இரு கிளைகளையும் மாற்றியமைத்தமை.

1. 1971, 1972 இல் திறக்கப்பட்ட கச்சேரி அலுவலகங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.
2. வைப்புக்களின் எண்தொகைகள் 1972 ஒகத்து இறுதியில் உள்ளவாறு.

மக்கள் வங்கியானது 1972 இல் 9 கிளை அலுவலகங்களைத் திறந்தது; இவை தெல்தெனியா, மட்டக்களப்பு (மாநகரக் கிளை), கலகெதற, கலெவெல, பசறை, அக்குறசை, தெல்கொட, நாரகென்பிட்டி, வலசுமுல்லை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. கற்றன் தேசிய வங்கி. யாழ்ப்பாணம், வெலி மடை, நாவலப்பிட்டி ஆகிய இடங்களில் மூன்று கிளை அலுவலங்களைத் திறந் தது. 1971 இறுதியில் எதுவித கிளைகளும் இல்லாத இலங்கை வர்த்தக வங்கி, கலவெல்லை, மாத்தளை ஆகிய இடங்களில் இரு கிளை அலுலங்களைத் திறந் திருக்கையில், இலங்கை வங்கி மிறிகமவில் கிளையலுவலகம் ஒன்றைத் திறந் தது. இலங்கை வங்கி கொழும்பு, அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய இடங் களில் மூன்று கச்சேரி அலுவலங்களையும் திறந்தது.

மொத்த வைப்புக்களில் இலங்கை வங்கிகளின் பங்கு 1971 திசெம்பர் இறுதியில் 77 சதவீதத்திலிருந்து 1972 ஓகத்து இறுதியில் 79 சதவீதமாக உயர்வுற்றது. பிரித்தானிய வங்கிகளின் பங்கு 19 சதவீதத்திலிருந்து 17 சத வீதமாகக் குறைவுற்றமையால் இவ்வதிகரிப்பு ஏற்பட்டது. கேள்வி வைப்புக் களில் இலங்கை வங்கிகளின் பங்கு 1971 திசெம்பர் இறுதியில் 75.7 சதவீதத் திலிருந்து 1972 ஓகத்து இறுதியில் 78.7 சதவீதமாக உயர்வுற்றிருக்கையில் இவற்றின் தவணை சேமிப்பு வைப்புக்களின் பங்கும் 79.2 சதவீதத்திலிருந்து 79.6 சதவீதமாகச் சிறிதளவு உயர்வுற்றது.

எல்லா வங்கிகளிலும் தனியார் துறைக் கேள்வி வைப்புக்களின் சராசரி அளவு ரூ. 5,289 இலிருந்து 1972 இன் முதல் அரைப்பகுதியில் ரூ. 5,027 ஆகவும், நிலையான வைப்புக் கணக்குகள் ரூ. 37,821 இலிருந்து ரூ. 36,918 ஆகவும் குறைவுற்றன. மறுபுறம் சேமிப்பு வைப்புக் கணக்குகளின் சராசரி அளவு ரூ. 1,019 இலிருந்து ரூ. 1,060 ஆக உயர்வுற்றது.

**3. சேமிப்பு நிறுவனங்களும், நீண்ட தவணைக் கொடுகடன் நிறுவனங்களும்.**

அரசாங்கத்தால் நிறுவப்பட்ட சேமிப்பு நிறுவனங்களாலும். கடன்வழங் கும் நிறுவனங்களாலும் செய்யப்பட்ட கடன் வழங்கும் தொழிற்பாடுகளின் புள்ளிவிபரங்களை அட்டவணை II (ஈ) 15 தருகின்றது. இந்நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த அளவு 1972இல் மேலும் குறைவுற்றது. 1972 ஆம் ஆண்டு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினுல் வழங்கப்பட்ட கடன்களின் தொகை, இது தொழிற்பாடுகளை ஆரம்பித்ததன் முதலாண்டிற் குப்பின் இதுவரை பதியப்பட்ட எத்தொகையிலும் பார்க்க ஆகக்குறைந் தளவு தொகையைப் பதிவுசெய்தது. இதேபோன்று கமத்தொழிற் கைத் தொழிற் கூட்டுநிலையத்தினுல் வழங்கப்பட்ட கடன்கள், இது தொழிற்பாட்டை ஆரம்பித்ததிலிருந்து எவ்வாண்டுத் தொகையிலும் பார்க்க மிகக் குறைவுற் றிருந்தன. 1972 இல் தனியார்துறை முதலீட்டத்திற்குச் சாதகமாகவுள்ள சூழ்நிலை மேலும் வீழ்ச்சியடையாவிடினும், தொடர்ந்தும் சாதகமற்ற நிலையி

## அட்டவணை II (ஈ) 15

### நீண்டகாலக் கொடுகடன் நிலையங்களின் கடன் வழங்கும் தொழிற்பாடுகள்

ஆயிரம் ரூபாய்களில்.

| | 1968 | | 1969 | | 1970 | | 1971 | | 1972 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கப் பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப் பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப் பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப் பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப் பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை |
| 1. அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (அ) ... ... | 7,273 | 31,716 | 19,561 | 47,982 | 27,082 | 70,920 | 6,439 | 71,422 | 2,832 | 66,168 |
| 2. இலங்கைச் சேமிப்பு வங்கி (ஆ) ... ... | 4,386 | 19,943 | 3,671 | 20,921 | 4,563 | 22,803 | 3,082 | 23,517 | 3,848 | 24,698 |
| 3. கமத்தொழிற் கைத்தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனம் ... | 3,285 | 30,288 | 4,322 | 31,090 | 4,719 | 31,552 | 3,296 | 31,108 | 1,751 | 29,839 |
| 4. அரசாங்க ஈட்டு வங்கி ... ... | 6,623 | 57,816 | 8,597 | 61,943 | 9,456 | 66,995 | 6,900 | 68,757 | 3,119* | 69,344 |
| 5. கடன் சபை .. ... | 1,076 | 10,758 | 1,212 | 10,920 | 2,459 | 11,858 | 1,926 | 12,570 | 1,351 | 12,825 |
| 6. தேசிய வீடமைப்புத் திணைக்களம் (இ) ... ... | 14,355 | 113,960 | 11,663 | 118,867 | 15,056 | 127,386 | 12,370 | 131,667 | 12,616 | 133,440 |
| மொத்தம் ... ... | 36,998 | 264,481 | 49,026 | 291,723 | 63,335 | 331,514 | 34,013 | 339,041 | 25,517 | 336,314 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* முதல் ஏழு மாதங்களின் மொத்தம்.

(அ) பங்கு முதலீடுகளை உட்படுத்தும்.

(ஆ) தேசிய சேமிப்பு வங்கியானது, 1.4.72 தொடக்கம் இலங்கைச் சேமிப்பு வங்கியின் இருப்புச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் ஒத்தது.

(இ) எண்தொகைகள் ஒற்றோபர்/செத்தெம்பர் நிதியாண்டுக்குரியனவாகும். வழங்கப்பட்ட கடன்களின் எண்தொகைகள், தனியாட்களுக்கும், கட்டடச் சங்கங்களுக்கும் வழங்கிய கடன்களை மட்டுமே காட்டுகின்றன. 1968–72 ஆண்டுகளுக்குரிய வெளிநிற்கும் தொகைகள், கட்டடச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை நீக்குவனவாகும்.

லேயே இருந்ததென்பதை இவ்வுண்மைகள் வலியுறுத்துகின்றன.

1971, 1972 ஆம் ஆண்டுகளில் சேமிப்பு வைப்புக்களினதும், சேமிப்புச் சான்றிதழ்களினதும் இயக்கங்களை அட்டவணை II (ஈ) 16 சுருக்கித் தருகின்றது.

**அட்டவணை II (ஈ) 16**

**சேமிப்பு வைப்புக்களும் சேமிப்புச் சான்றிதழ்களும்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1970 திசெம்பர் | 1971 திசெம்பர் | 1972 திசெம்பர் | மாற்றம் 1970/71 | மாற்றம் 1971/72 |
|---|---|---|---|---|---|
| அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி ... | 594.4 | 659.0* | — | + 64.6* | |
| இலங்கைச் சேமிப்பு வங்கி [1, 2] ... | 113.3 | 197.7* | — | + 84.4* | |
| தேசிய சேமிப்பு வங்கி[2] ... | | — | 905.1* | — | + 48.4 |
| வர்த்தக வங்கிகள் (தவணை சேமிப்பு வைப்புக்கள்)[2, 3] ... | 1,168.6 | 1,317.3 | 1,353.1 | +148.7 | + 35.8 |
| சேமிப்புச் சான்றிதழ்கள் ... | 73.1 | 65.3 | 65.2 | — 7.8 | — 0.1 |
| மொத்தம் ... | 1,949.4 | 2,239.3* | 2,323.4* | +289.9 | + 84.1 |

1 நிலையான வைப்புக்களை உள்ளடக்கும்.

2 தேசிய சேமிப்பு வங்கி, 1-4-72 தொடக்கம் அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியினதும், இலங்கைச் சேமிப்பு வங்கியினதும், சேமிப்புச் சான்றிதழ் நிதியினதும் இருப்புச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் ஏற்றது.

3 அரசாங்க வைப்புக்களை உள்ளடக்கும்.

* இவ்வெண்தொகைகள் திருத்தத்திற்குட்பட்டவை.

ஊழியர் சேமநிதியினால் 1972 ஆம் ஆண்டு பெறப்பட்ட மொத்த உதவு தொகைகள் சென்ற ஆண்டின் ரூ. 1,629 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 1,766 இலட்சமாக விளங்கின.

**4. தவணைக் கொள்வனவு நிதிக் கூட்டுநிலையங்கள்**

மத்திய வங்கியினால் நடாத்தப்படும் காலாண்டளவைகளிலிருந்து பெறப்படும் தவணைக் கொள்வனவு நிதிக்கூட்டுநிலையங்களினது தொழிற்பாடுகளின் முக்கிய பண்புகள் ஒவ்வொரு காலாண்டிற்கும் 1971 யூனிலிருந்து 1972 யூன்வரை அட்டவணைகள் II (ஈ) 17 இலும் 18 இலும் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை II (ஈ) 17

## தவணைக் கொள்வனவு நிதிக் கூட்டுநிலையங்களின் தொழிற்பாடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1971 யூன் 30இல் உள்ளவாறு | 1971 செத்தெம்பர் 31இல் உள்ளவாறு | 1971 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 1972 மாச்சு 31இல் உள்ளவாறு | 1972 யூன் 30இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| 1. வைப்புக்கள் ... | 67.2 | 76.3 | 83.0 | 94.8 | 99.6* |
| 2. வெளிநிற்கும் தவணைக் கொள்வனவு வியாபாரம் ... | 72.9 | 86.1 | 81.8 | 91.4 | 92.3* |
| 3. வெளிநிற்கும் கடன்கள் ... | 19.9 | 22.2 | 26.7 | 24.9 | 25.9* |

*தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (ஈ) 18

## தவணைக் கொள்வனவு நிதிக் கூட்டுநிலையங்கள்—நிதிமூலங்கள்

### மொத்தப் பொறுப்புக்களின் சதவீதமாக

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1971 யூன் 30இல் உள்ள வாறு | 1971 செத்தெம் பர் 30இல் உள்ள வாறு | 1971 திசெம்பர் 31இல் உள்ள வா று | 1972 மாச்சு 31இல் உள்ள வாறு | 1972 யூன் 30இல் உள்ள வாறு |
|---|---|---|---|---|---|
| 1. மூலதனக் கணக்குகள் ... | 24.8 | 27.0 | 24.9 | 22.0 | 22.0* |
| 2. வைப்புக்கள் ... | 53.5 | 53·2 | 55.9 | 58.7 | 59.2* |
| 3. கடன்பாடுகள் ... | 11.6 | 9.8 | 9.1 | 9.0 | 9.6* |
| 4. ஏனைய பொறுப்புக்கள் ... | 10.1 | 10.0 | 10.1 | 10.2 | 9.3* |
| | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

*தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

### 5. மத்திய வங்கித்தொழில்

1972 சனவரி-ஒகத்து காலப்பகுதியில் மத்திய வங்கியின் இருப்புச் சொத்துக்கள் பொறுப்புக்கள் 1971இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ 941 இலட்சங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 2,932 இலட்சத்தால் உயர்வுற்றன. இருப்புச்சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு சர்வதேச ஒதுக்கின் ரூ 572 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும், உள்நாட்டு இருப்புச்சொத்துக்களின் ரூ. 2,360 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும் உள்ளடக்குகின்றது. உள்நாட்டு இருப்புச் சொத்துக்களில் ஏற்பட்ட கணிசமானளவு அதிகரிப்பு முக்கியமாக 'ஏனைய' இருப்புச்சொத்துக்களினதும்,

கணக்குகளினதும், ரூ. 1,592 இலட்சம் கொண்ட அதிகரிப்பினாலும், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணை உடைமைகளின் ரூ. 615 இலட்சம்கொண்ட அதிகரிப்பினாலும் ஏற்பட்டது ஏனைய இருப்புச் சொத்துக்களிலும், கணக்குகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பு அரசாங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட ரூ. 1,453 இலட்சம்கொண்ட மிகப்பெருமளவு அதிகரிப்பைக் கொண்டுள்ளது; இதன் எதிர்ப்புறக் கணக்கு, 'ஏனைய பொறுப்புக்கள்' பகுதியில் காட்டப் பட்டுள்ளது

பொறுப்புக்கள் பகுதியில், வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ரூ. 97 இலட்சத்தால் உயர்வுற்று வெளிநாட்டுக் கடன்பாடுகளில் ரூ. 474 இலட்சம் கொண்ட வீழ்ச்சியையும், அந்நிய நிறுவனங்களின் வைப்புக்களில் ரூ. 571 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும் உள்ளடக்குகின்றன. மறுபுறம் உள்நாட்டுப் பொறுப்புக்கள் முக்கியமாக 'ஏனைய பொறுப்புக்களின்' ரூ. 2,458 இலட்சம் கொண்ட அதிகரிப்பினாலும், நாணய வெளியீட்டின் ரூ. 621 இலட்சம் கொண்ட அதிகரிப்பினாலும் ரூ. 2,836 இலட்சத்தால் உயர்வுற்றன. 'ஏனைய பொறுப்புக்களில்' ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக அரசாங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட உத்தரவாதங்களின் அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும்.

சென்ற சில ஆண்டுகளாக நடைமுறையிலிருந்த வர்த்தக வங்கிக் கொடுகடன் மீதான வரம்புகள், தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் நாணய நிலைப்படுத்தற் குறிக்கோளுக்கு முரண்பாடாக இருக்குமெனக் கருதப்பட்டமையால் 1972 ஏப்பிறல் 1ஆந் திகதி தொடக்கம் நீக்கப்பட்டன. ஆயினும், நுகர்வு, இலாபத்தை எதிர்நோக்கிக் கையிருப்புச் சேர்த்தல் ஆகியன போன்ற அத்தியாவசியமற்ற தேவைகளுக்கு 1972 மாச்சு 31இல் உள்ளபடியான கொடுகடன் அளவுக்கு மேல் அதிகரிப்பதைத் தவிர்க்குமாறு வேண்டப்படுகின்றன.

1972ஆம் ஆண்டு நடுத்தர நீண்ட தவணைக்கொடுகடன் நிதியிலிருந்து மத்திய வங்கியினால் வழங்கப்படும் மீளநிதியிடல் கடன்கள் ரூ. 102 இலட்சமாக விளங்கின. இதில் ரூ. 91 இலட்சம் தேயிலைத் தொழிற்சாலையைப் புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. கைத்தொழில் விவசாய நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மீளநிதியிடற் கடன்கள் ரூ 9 இலட்சமாக விளங்கின; இதில் ரூ. 8 இலட்சம் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தாலும், ரூ. 1 இலட்சம் அரச ஈட்டு வங்கியினாலும் பெறப்பட்டது. வர்த்தக வங்கிகள் தமது கைத்தொழில், கமத்தொழில் கடன்களுக்காக இவ்வசதியைப் பயன்படுத்தாதிருக்கையில், தேயிலைத் தொழிற்சாலையைப் புதுப்பித்தலுக்காக வழங்கப்பட்ட மீளநிதியிடல் கடன்கள் ரூ 85 இலட்சத்திற்கு வகைகூறின. 1972இல் முற்றிலும் பெறப்பட்ட மீளக்கொடுப்பனவுகளினால் நிதிக்குச் செய்யப்பட்ட கொடுகடன்கள் ரூ. 132 இலட்சமாக விளங்கின. 1972 திசெம்பர் இறுதியில் நிதியிலிருந்து எஞ்சிய தொகை ரூ 175 இலட்சமாக விளங்கியது இந்நிதியம் ஆரம்பித்ததிலிருந்து இந்நிதியத்தில் இருந்து வழங்கப்பட்ட மொத்த மீளநிதியிடல் கடன்களின் மீதான வெளிநின்ற தொகை 1972 திசெம்பர் இறுதியில் ரூ 576 இலட்சமாக விளங்கியது.